Registered as a Newspaper

பக்கங்கள் 16 விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 312

புதன்கிழமை 04 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 17 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



நீதிபதிக்கு அச்சுறுத்தல்

## யாழில் இன்று மனிதச்சங்கிலி

விரிவு – பக்.15

வடக்கு - கிழக்கெங்கும்

# நீதிபதிக்கு நீதிகோரி தீவிரமாகிறது போர்!

முல்லைத்தீவு, ஒக்ரோபர் 4

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை, தீர்ப்பை மாற்றியெழுதுமாறு அழுத்தம் வழங்கியமை என்பன தொடர்பில், நீதிபதிக்கு நீதிகோரியும் பேரினவாத அடக்கு முறையைக் கண்டித்தும் தமிழர் தாயகத்திலும் நாடளாவிய ரீதியிலும் நேற்றுத் தீவிர போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

»15

## நீதிபதியின் பதவி விலகல்; விசாரணைக்கு கைவிரிப்பு!

கொழும்பு, ஒக். 4

முல்லைத்தீவு நீதிபதி தொடர்பில் விசாரணை நடத்தும் அதிகாரம் அரசுக்கோ, ஜனாதிபதிக்கோ கிடையாது. எனவே, இது விடயம் தொடர்பான பொறுப்பை அரசின்

»15

## மாணவியைக் கண்டித்த ஆசிரியர் மீது தாக்குதல்

இரண்டு பேர் கைது

»15

நீதிபதியின் விவகாரம்:

## நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் சதிமுயற்சி!

அமைச்சர் அமரவீர சந்தேகம்

முல்லைத்தீவு, ஒக். 4

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவிவிலகலின் பின்னணியில் நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் சூழ்ச்சி இருக்கலாம் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

»15

## சர்வதேச விசாரணைகள் எதற்கும் இடமேயில்லை!

ஜனாதிபதி அழுங்குப்பிடி

காணி மோசடி விவகாரம்;

## நொத்தாரிஸ் ஒருவரின் எழுதுவினைஞர் கைது

விரிவுகள்:- பக் - 15 இல்









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிதியமைச்சின் செயலாளரின் உயிருக்கும் அச்சுறுத்தல்கள்!



## விசாரிக்க வேண்டும் என்கிறார் ஹர்ஷ டி சில்வா

**கொழும்பு, ஒக்.4**

**நிதி அமைச்சின் செயலாளருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. திரைக்குப் பின்னால் நடக்கும் விடயங்கள் தொடர்பில் தேடிப்பார்க்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

உயிர் அச்சுறுத்தல்கள் தொடர்பில் பேசும்போது நிதி அமைச்சின் செயலாளருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் செய்திகள் வெளியாகியுள்ளன.

தனது குடும்பத்தினர் தொடர்பிலும் அச்சுறுத்தல்கள் உள்ளன என்று நிதியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

உயிரச்சுறுத்தல் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் அறிவிக்கப்படும் என்று நிதியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அச்சுறுத்தல்கள் தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளரே கூறுகிறார். பிறிதொருவர் குறிப்பிடவில்லை.

ஆகவே திரைக்குப் பின்னால் நடக்கும் விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறோம் - என்றார். (ஏ-இ)

## உயர்தரப் பரீட்சை திகதி விரைவில் வெளியாகும்!

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.4

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான திகதி அடுத்து வரும் நாள்களில் பரீட்சைகள் ஆணையாளரால் அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2ஆம் திகதிவரை நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பரீட்சையை ஒத்திவைக்கவேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து பரீட்சையை ஒத்திவைப்பதற்கான ஆலோசனைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. (ஏ-இ)

## பொருளாதாரக் கொள்கையால் பொதுமக்கள் பெரும் பாதிப்பு

### அமெ. தூதுவரிடம் தெரிவித்தார் சஜித்



தற்போதைய அரச பொருளாதாரக் கொள்கைகளால் இலங்கை மக்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஜூலி சங்கைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே சஜித் பிரேமதாஸ இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். (ஏ-இ)

## 6 மாதக் குழந்தை சாவு 21 வயதுத் தாய் கைது!

ஆறு மாதக் குழந்தையைத் தாக்கிக் கொலை செய்த குற்றச்சாட்டில் 21 வயதான தாய் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் ஊருபோக்க, கட்டுவன பிரதேசத்தில் நடந்துள்ளது. கடந்த 30 ஆம் திகதி தாய் குழந்தையைக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கும்போது குழந்தையின் தலை சுவரில் பட்டது என்று தெரிவிக்கப்பட்டு மருத்துவமனையில் குழந்தை சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டது. ஆயினும் சிகிச்சை பயனின்றி குழந்தை உயிரிழந்தது. மருத்துவமனை விசாரணைகளில் குழந்தையின் மரணத்தில் சந்தேகம் நிலவியதை அடுத்து, இந்த விடயம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டு. ஊருபோக்க பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். குழந்தை தாயால் கடுமையாகத் தாக்கப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதையடுத்துப் பொலிஸார் தாயைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஏ-இ)

## நிகழ்நிலைக் காப்பு சட்டவரைவு சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக்.4

நிகழ்நிலைக் காப்பு சட்ட வரைவு நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்ட வரைவின் சர்ச்சைக்குரிய சில அம்சங்கள் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தன. இந்தச் சட்டவரைவு தொடர்பாகப் பல தரப்புகள் அதிருப்தியை வெளியிட்டிருந்தன. இந்நிலையில் நிகழ்நிலைக் காப்புச் சட்ட வரைவு நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது என நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்திருந்தார். (ஏ-இ)

## உவர்நீர்தடுப்பணையில் குழாய் பொருத்தும் பணி

### வடமராட்சியில் திங்களன்று

வடமராட்சி பிரதேசங்களில் உவர்நீர்த் தடுப்பணை சீரமைப்பு வேலைகள் இடம்பெற்றுவரும் நிலையில், வயற்காணிகளில் சேரும் மேலதிக நீரை வெளியேற்றுவதற்கு குழாய்கள் பொருத்தும் பணி எதிர்வரும் திங்கட்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது.

கப்பூது மற்றும் துன்னாலை தெற்கு பிரதேசங்களில் இந்தத் திருத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒருபகுதியாக வயற்காணிகளில் சேரும் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக குறிப்பிட்ட சில இடங்களில் குழாய்கள் பொருத்தப்படவுள்ளன. குறித்த பிரதேசங்களில் உள்ள விவசாயிகள், கமக்கார அமைப்பினருடன் கலந்துரையாடி பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்யுமாறு கரவெட்டி கமநல சேவை பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-100)

## நீதிபதியின் பதவி விலகல் மழுப்பிய நீதி அமைச்சர்!

கொழும்பு, ஒக்.4

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகல் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியபோது அதற்குப் பதிலளிக்காது நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடந்த அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகல் தொடர்பாகச் சுட்டிக்காட்டினார்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் பதவி விலகல் விவகாரம் தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத் தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்று எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார்.

அப்போது கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 2020.10.20 ஆம் திகதி நாடாளுமன்ற உரை ஊடாக நீதிமன்றத்தை கடுமையாக விமர்சித்தார்.

'உயர்நீதிமன்றம் பயனற்றது.உயர்நீதிமன்றத்தில் உள்ளவர்கள் வீடு செல்ல வேண்டும்' என்று கடுமையாக விமர்சித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் வழக்கு விவகாரத்தில் உயர்நீதிமன்ற நீதிபதி நவாஸ் கட்டளை பிறப்பித்தார் என்று இவர் (சுமந்திரன்) குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற சிறப்புரிமை ஊடாக நீதிமன்றத்தை மலினப்படுத்தினார். இவரைப்போன்று எவரும் நீதிமன்றத்தை கடுமையாக விமர்சிக்கவில்லை. இன்று நீதிமன்றத்தின் சுயாதீனம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கிறார்.

பிறிதொருவர் விமர்சித்திருந்தால் இன்று அந்த நபர் கடூழியச் சிறைத்தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பார்.

இவரே (சுமந்திரனை நோக்கி) நீதிமன்றத்தை மலினப்படுத்தினார் என்று தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த எம்.ஏ.சுமந்திரன், நான் குறிப்பிட்ட விடயத்துக்குப் பொருத்தமற்ற வகையில் நீதியமைச்சர் உரையாற்றுகிறார். முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் நீதியமைச்சர் முறையாகப் பதிலளிக்கவில்லை.

நான் நீதிமன்றத்தை விமர்சித்தேன் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நீதிபதிகளின் பெயரைக் குறிப்பிட்டு நான் உரையாற்றவில்லை என்றார். (ஏஇ)

## நீதி அற்ற நாடு என்பதை சர்வதேசத்துக்கு விளக்குக

### அருட்தந்தை சக்திவேல் வலியுறுத்து

வவுனியா, ஒக்.4

இது நீதிபதிக்கே நீதி இல்லாத நாடு. இந்த நாட்டில் நீதி தேடுவோர் பாதுகாப்போடு வாழமுடியாது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நீதிபதி சரவணராஜா உயிர் பாதுகாப்புக்கருதியே வெளிநாட்டில் தஞ்சமடைந்துள்ளார்.

இது நீதித்துறைக்கும் அதிகார அரசியலுக்கும் பேரினவாதத்துக்கும் சோரம் போய்க் கொண்டிருக்கின்றது என்பதைத் தெளிவாக்கி இருக்கிறது.

தமிழர்களுக்கு நியாயமான நீதி நிறைந்த எதிர்காலம் இல்லை. நீதிக்காகப் போராடுவது உயிர் அச்சம் மிக்கது என்பதை சர்வதேசம் தெளிவாக உணரும் நேரமிது.

இதைச் சர்வதேசத்துக்கு கூர்மைப்படுத்த வெளிநாட்டில் புகலிடமாகியுள்ள அனைத்துத் தரப்புகளும் தமிழர் தேசத்தில் வாழும் மக்களின் பாதுகாப்புக் கருதி சர்வதேச அரசியல் தலைமைத்துவங்களுக்கு கூட்டாக அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் - என்றார். (எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பாதிக்கும் சட்டங்கள் வேண்டாம்

## சர்வதேச நாணயநிதியம் கோரிக்கை

**கொழும்பு, ஒக்.4**

**தகவல் அறியும் உரிமைச்சட்டத்தைப் பாதிக்கும் சட்டங்கள் எதையும் எதிர்காலத்தில் உருவாக்கவோ நடைமுறைப்படுத்தவோ வேண்டாம் என சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.**

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், இலஞ்ச ஊழல் ஒழிப்புச் சட்டம் என்பன தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் உருவாக்கப்படும் போது நாட்டின் பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்தப்படும். அதேவேளையில் தனி நபர்களின் உரிமைகள் குறித்தும், பொதுமக்கள் மேற்கொள்ளும் புலன் விசாரணைகள் குறித்தும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

மேலும், நிதியமைச்சில் பரந்துபட்ட தகவல்களை உள்ளடக்கிய வெளிப்படைத்தன்மையுடன் கூடிய இணையத்தளம் உருவாக்கப்படவேண்டும். பொதுமக்கள் தாம் விரும்பிய தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளக்கூடியவாறு இந்த இணையத்தளம் வடிவமைக்கப்பட வேண்டும்.

ஒரு பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் யாவும் இந்த இணையத்தளத்தில் இடம்பெறவேண்டும். முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் விவரங்கள், வரி விலக்குப் பெற்ற நிறுவனங்கள், அனுமதிக்கப்பட்ட வரி விலக்கு வீதம், தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களின் விவரம், பண்டங்கள் சேவைகள் வரி (வற்) விலக்குப் பெற்ற நிறுவனங்களின் விவரம் என்பன இந்த இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

இந்த இணையத்தளம் தகவல் அறியும் ஆணைக்குழுவின் கண்காணிப்பின் கீழ் இருக்கவேண்டும். ஆறு மாதங்களுக்கொரு முறை தகவல்கள் புதுப்பிக்கப்படவேண்டும் என சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதல் இந்த இணையத்தளத்தை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சர்வதேச நாணயநிதியம் ஆலோசனை வழங்கியுள்ளது. (ஒ-6)

# கேணல் திலீபன், சங்கர் ஜேர்மனியில் நினைவு

பேர்லின், ஒக்.4

தியாகதீபம் கேணல் திலீபன் மற்றும் தமிழீழ விமானப்படைத் தளபதி கேணல் சங்கர் ஆகியோரின் நினைவு வணக்க நிகழ்வு ஜேர்மனி ஸ்ருட்காட் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்புற இடம்பெற்றது.

பொதுச்சுடர் ஏற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு ஈகச்சுடரேற்றி மலர்தூவி மக்கள் அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து விடுதலைக் கானங்கள் இசைக்க இளையோர் அமைப்பினரால் நடனம், கவியரங்கம், சிந்தனைகளைத் தூண்டும் விதத்திலான நாடகம் என்பன இடம்பெற்றன.

இறுதியில் தமிழீழம் நாளை பிறக்கும் என்ற நம்பிக்கைப் பாடலுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன. (ச-இ)

## சாவகச்சேரி நகரிலுள்ள

# பழமை வாய்ந்த வேம்பு கடும் காற்றால் சரிந்தது

யாழ்ப்பாணம், ஒக்.4

சாவகச்சேரி நகரின் மத்தியில் காணப்பட்ட நூற்றாண்டு பழமை வாய்ந்த வேம்பு ஒன்று நேற்றுக் காலை வீசிய கடும் காற்றால் வேருடன் சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் ஏ-9 வீதி போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டது. மரத்தின் அருகில் அமைந்திருந்த மருந்துக் கடையில் பெருமளவு மக்கள் நின்றபோதிலும் தெய்வாதீனமாக பெரியளவில் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. ஒருவர் மட்டும் சிறுகாயங்களுக்குள்ளானார்.

மின்கம்பங்கள் மீது வேம்பு சரிந்து வீழ்ந்ததால் சிறிதுநேரம் மின்தடை ஏற்பட்ட நிலையில் மின்



சாரசபை ஊழியர்களால் மின்கம்பம் சீர்செய்யப்பட்டதுடன் மரமும் சிறிது நேரத்தில் அகற்றப்பட்டது. (ச-9-131-159)

# புதினம் தெரியுமோ?

**நேற்றைக்கு பட்சி சொன்ன விசயத்தில சிலருக்கு டவுட். அதை மெயில்ல அனுப்பிக் கேட்டிருந்திச்சினம்.**

**'அரசாங்கம் சொல்லுற மாதிரி நீதிபதிக்கு குடும்பப் பிரச்சினை, கார் வித்தது, தூதர்மாரைச் சந்திச்சது இந்த விசயமெல்லாம் உண்மையோ, பொய்யோ? 'இதுதான் அவையின்ர டவுட். இந்த விசயங்கள் எல்லாமே உண்மைதான். நீதிபதிக்கும் அவரின்ர மனைவிக்கும் இடையில பிரச்சினையள் இருந்து அது பற்றி பொலிஸ் ஸ்ரேசனில முறைப்பாடும் ரண்டு தரப்பாலையும் போடுப்பட்டிருக்கு. ஆனால் அது கனகாலத்துக்கு முதல் நடந்த ஒண்டு. அரசாங்கம் சொல்லிற மாதிரி, அவர் குடும்பப்பிரச்சினையால தான் வெளிநாட்டுக்குப் போனவர் எண்டால் எப்பவோ அவர் போயிருக்கவேணும். இப்ப போகவேண்டிய அவசிய மில்லை. அதோட குடும்பப்பிரச்சினைக்கு வெளிநாட்டுக்கு ஓடுறதுதான் தீர்வெண்டால் இலங்கையில இருக்கிற எல்லாருமெல்லோ வெளிநாட்டுக்குப் போயிருக்கவேணும். அரசாங்கம் பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லப்பழகோணும் கண்டியளோ.**

**மற்றது அவர் தனக்கு அச்சுறுத்தல் வந்ததால, என்ன செய்யாலமெண்டு ரண்டுமூண்டு வெளிநாட்டுத் தூதரகங்களிட்ட முறையிட்டு யோசனை கேட்டிருக்கிறார். அதுக்காகத்தான் தூதர்மாரை அவர் சந்திச்சவர். அவைதான் 'இஞ்ச இருந்தால் ஆபத்து. பத்திரமா வேற ஒரு நாட்டில இருக்கிறதுதான் நல்லது' எண்டு அட்வைஸ் சொல்லியிருக்கினம். இதுக்குப் பிறகுதான் அவர் தன்ர காரை வித்து, வெளிநாடு போற அலுவலைப் பாத்தவர். அதோட தனக்கு நெருக்கமான சிலரிட்ட 'ரூரிஸ்ட் விசாவில வெளிநாட்டுக்கு போய்வரப்போறன்' எண்டும் சொல்லியிருக்கிறார். அவர் சுற்றுலாவாத்தான் வெளிநாட்டுக்குப் போறார் எண்டுதான் புலனாய்வுக்காரரும் நினைச்சிருக்கினம், இல்லாட்டி அவர் அரசாங்கத்தின்ர அச்சுறுத்தலால தான் நாட்டை விட்டு தப்பியோடுறார் எண்டு புலனாய்வுக்காரருக்கு மணத்திருந்தால், ஏதும் திருகுதாளம் செய்து அவரைப் போகவிடாமல் பண்ணியிருப்பினம். இல்லாட்டி அவரையும் காணாமல் ஆக்கியிருப்பினம். நல்லவேளையாக அவர் தன்ர மூளையைப் பாவிச்சு, புலனாய்வுக்காரரை ஏய்ச்சுப் போட்டு, தப்பிப்போட்டார்.**

**அதோட மேலிடம் அவரைக் கூப்பிட்டு வெருட்டேல எண்டும் அரசாங்கம் சொல்லுது. ஆனால் இப்பிடி 'நாட்டாமை தீர்ப்பை மாத்து' எண்டு இதுக்கு முதலும் இதே நீதிபதியை மேலிடம் வெருட்டினதாம். பாவியர் போன இடமெல்லாம் பள்ளமும் திட்டியும் எண்ட மாதிரி, நீதிபதி சரவணராஜா போன இடமெல்லாம் புதைகுழியா இருந்திருக்கு. மன்னார்ப் புதைகுழி வழக்கில இவர்தான் முதல்ல நீதிபதியா இருந்தவர். அப்பவும் அரசாங்கத்துக்கு ஏத்தமாதிரி வழக்கை நடத்தச் சொல்லி மேலிடம் வெருட்டியிருக்கு. அந்தக் கதை முதலே சாடைமாடையா அடிபட்டது. இப்பதான் அதுவும் உண்மையெண்டு உறுதியாகியிருக்கு. நீதிபதி சொந்தப் பிரச்சினையால போனவரோ, இல்லாட்டி அரசாங்கத்தின்ர உயிர் அச்சுறுத்தலால போனவரோ எண்டு இப்ப நீங்களே சொல்லுங்கோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையப் பாதுகாப்பு சட்டவரைவு: ம.உரிமைகள் ஆணைக்குழு கவலை

கொழும்பு, ஒக். 4

**அரசாங்கம் வெளியிட்டுள்ள புதிய இணையப் பாதுகாப்புச் சட்டமூலம் குறித்த 7 பரிந்துரைகள் அடங்கிய கடிதத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் பிரதம நீதியரசர் ரிக்கிரி பண்டார தெஹெதெனிய பொதுப்பாதுகாப்பு அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளார்.**

மக்களின் இணையப் பாதுகாப்பை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்த அதேவேளை, முன்மொழியப்பட்ட சட்டம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

இணையச் செயற்பாடுகள் தொடர்பாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன், இந்தச் சட்டவரைவு அரசமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்துடன் இணைந்திருப்பதை உறுதி செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

துன்பத்தின் உணர்வுகளின் அளவு வேறுபடலாம் என்பதனால் நபர்களுக்கு மனஉளைச்சலை ஏற்படுத்துவதாகக் கருதப்படும் அறிக்கைகளை குற்றமாக்குவதைத் தவிர்க்க வேண்டும். முன்மொழியப்பட்ட சட்டவரைவு அதன் அரசியல் சுதந்திரத்துக்கு உத்தரவாதம் அளிக்கும் நியமன பொறிமுறையின் மூலம் நியமிக்கப்படவேண்டும்

நபர்களுக்கு எதிராக எடுக்கப்படும் பாதகமான முடிவுகளுக்கான நடைமுறைகளை வகுக்கும் சட்டவரைவில் உள்ள விதிகள், இயற்கை நீதியின் விதிகளுக்கு இணங்க, அவர்கள் கேட்கும் வாய்ப்பை வழங்குவதை உறுதிசெய்யும் வகையில் திருத்தப்பட வேண்டும்.

1883ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தண்டனைச் சட்டத்தில் ஏற்கனவே காணப்பட்ட குற்றங்களைச் செய்ய மற்றவர்களைத் தூண்டும் 'தடைசெய்யப்பட்ட அறிக்கைகள்' தொடர்பாக விதிக்கப்பட்ட தண்டனைகளின் பகுத்தறிவு, நியாயத்தன்மை மற்றும் விகிதாசாரத்தின் அடிப்படையில் கணிசமாகத் திருத்தப்பட வேண்டும். இணையப் பயனர்கள் அநாமதேயமாக இருக்கவும், பகிடி, நையாண்டியில் ஈடுபடவும் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் விதத்தில், சாதாரணமான இணைய கணக்குகளை வகைப்படுத்துவதற்கான தெளிவான அளவுகோல்கள் சட்டவரைவில் சேர்க்கப்பட வேண்டும்.

பொலிஸ் விசாரணைகளுக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது, ஏனெனில் அவர்கள் பகிரங்கமாகப் பொறுப்பேற்காத தனிப்பட்ட நபர்களாக இருக்கலாம்.

சட்டவரைவு ஊடாக சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான புதிய குற்றத்தை அறிமுகப்படுத்தியதை வரவேற்கிறோம். அத்தகைய குற்றத்தை தனிச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்த நீதி மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் பணியாற்ற வேண்டும் - என்றும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. (ஒ-6)

# இ ன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். திடீர்ச் செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** அதிகப்படியான செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் காரிய அனுகூலமாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும். ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும். முக்கியமான முடிவு ஒன்று எடுப்பீர்கள். சூரிய பகவானை வழிபடுவது நலம் தரும்.

**கன்னி:** மனதில்தைரியமும்தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படலாம். மகிழ்ச்சி கிடைக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். ஆதாயம் உண்டாகும். பெருமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள்

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணம் - நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

பரிபாலனசபைத் தலைவர் த.சோதிலிங்கத்தின் தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் செ. த. குமரன் 'சைவ வாழ்வியலில் பிதிர்வழிபாட்டின் சிறப்புகள்' எனும் விடயப்பொருளில் நிகழ்த்தவுள்ளார். (ச)

◆ ◆ ◆ ◆

யாழ்ப்பாணம், ஒக். 4

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை பன்னாலை திருவருள் மிகு சிவபூதராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது.

சேக்கிழார் பெருமானின் குருபூஜையைத் தொடர்ந்து சைவப்புலவர் ச. முகுந்தன் 'திருத்தூங்கனை மாடத்திலுள்ள பெருமானை வழிபட்டு முத்தியடைந்த நாயனார்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச)

## யாழ். மாவட்ட கூட்டுறவு மகளிர் மாநாடு நாளை

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ்.மாவட்ட கூட்டுறவு மகளிர் மாநாடு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை மாவட்ட மகளிர்குழுத் தலைவி திருமதி வேதவல்லி செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபு, வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர் திருமதி அபிராமி பாலமுரளி, யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன், வடமாகாண கூட்டுறவு மற்றும் மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி காஞ்சனா குணதீசன், வடமாகாண கூட்டுறவு மற்றும் மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி இராஜமல்லிகை சிவசுந்தரசர்மா, யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் க.மகாதேவன் மற்றும் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

## நெடுந்தீவில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 4

நெடுந்தீவுக் கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கரையொதுங்கிய நிலையில் மீட் கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு 15ஆம் வட்டாரத்தில் உள்ள கலங்கரை விளக்கம் அமைந்துள்ள பகுதியில் உள்ள கடற்படை முகாமுக்கு அருகாகவே இந்தச் சடலம் கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் நெடுந்தீவுப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து சடலத்தை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-100-125)



இணுவில் பொது நூலகத்தின் கீழ் இயங்கும் திறன் விருத்தி மையத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் சிறுவர் சந்தை அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. (ய-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிக்காகக் கைகோர்ப்போம்

இலங்கையின் நீதித்துறை மீதிருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் இல்லாதொழிக்கப்பட்டிருக்கின்றது. முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் அரசாங்கத் தரப்பு அழுத்தங்களால் பதவி விலகினார் என்று கூறப்படும் நிலையில், நீதித்துறை மீதான அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து இன்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை மையப்படுத்திய அரசமைப்பில் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்ச்சியாகக் கேள்விக்குரியதாகவே இருந்தது. எனினும் நீதிபதிகளின் சுயாதீனமான பக்கச்சார்பற்ற நடவடிக்கைகளால் நீதித்துறையின் மீது மக்கள் நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் கொண்டிருந்தனர். ஆனால் இலங்கையின் நீதித்துறையின் மீதும் தமிழ் நீதிபதிகள் மீதும் அதிகாரத்தரப்பால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றார் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி. ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான நீதித்துறையே நாட்டு மக்களின் இறுதி நம்பிக்கை. தங்களுக்கான நீதியை நீதிமன்றத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை மக்கள் மனங்களில் இருந்தால் மட்டுமே நாடு வளமான திசை நோக்கிப் பயணிக்கும்.

தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டம் பல நாடுகளின் உதவியோடு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளும், தமிழர் பூர்வீக நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பும் அதன்பின்னர் மீண்டும் வீரியம் பெற ஆரம்பித்திருக்கின்றன. போரை முடிவுக்குக் கொண்டுவர உதவிய நாடுகளும் அயல் நாடான இந்தியாவும் அவற்றைத் தடுக்காது கண்மூடியிருக்கின்றன. தமிழர் பகுதிகளில் அரசாங்கத் திணைக்களங்களின் ஆதரவுடன் பௌத்தமயமாக்கலும், ஆக்கிரமிப்புகளும் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழர் பகுதிகளில் நடக்கும் இந்த அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்குரிய கடைசி நம்பிக்கையாக நீதிமன்றங்களே இருக்கின்றன. நீதிமன்றங்கள் ஊடாக நியாயத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற சிறிய நம்பிக்கையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவானின் பதவி விலகலோடு அற்றுப்போயிருக்கின்றது.


இலங்கையின் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி, நாடாளுமன்றம், நீதித்துறை என்பனவற்றை அரசமைப்பு அடையாளப்படுத்துகின்றது. ஆனாலும் இவற்றில் முதலிரு அதிகார மையங்களுமே இன்று நாட்டைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன. இந்த நாட்டின் சிறுபான்மையின மக்களைப் போலவே நீதித்துறையை நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்றமும் பந்தாடிக் கொண்டிருக்கின்றன. பிரதம நீதியரசரையே அவமானப்படுத்தி, பதவியைப் பிடுங்கி வீட்டுக்கு அனுப்பிய நாட்டில், ஒரு நீதிவானுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுப்பதென்பது ஆச்சரியமல்லவே. ஆனால் அவ்வாறு நீதியை நசுக்கிவிட்டு, காட்டாட்சியைத் தொடர அதிகாரத் தரப்பு முனைந்தால், அது நாட்டின் இருப்புக்கே கேடாகிவிடும். ஏற்கனவே பொருளாதாரத் 'தொந்துபொறியில்' இலங்கை ஈடாடிக் கொண்டிருக்கையில், நாடாண்டு கொண்டிருப்போரின் நீதியைக் கொல்லும் செயற்பாடுகள் இன்னமும் நாட்டை சிதில நிலைக்கே கொண்டுசெல்லக்கூடியவை. இதன் இறுதி விளைவு அப்பாவி மக்களையே தாக்கமுறச் செய்யும்.

சுயாதீனமாக பக்கச்சார்பற்று நடக்கும் நீதிபதிகளுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து – அச்சுறுத்தல்களை விடுத்து நீதிமன்றக் கட்டளைகளை – தீர்ப்புகளைத் தங்களுக்கு ஏற்றவாறு மாற்ற முயல்வது இலங்கை தனக்கான சவக்குழியைத் தானே தோண்டுவதற்கு ஒப்பானது. நாட்டில் ஜனநாயகம் இருக்கவேண்டுமானால் நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படுவது அவசியமாகும். ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த கதையாக நீதித்துறை நோக்கி நீண்டுள்ள அடக்குமுறைகளுக்கு கடும் எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டியது அவசியம். இதுவரையும் அவ்வாறான பலமான எதிர்ப்பைப் பதிவு செய்யாததாலேயே, இவ்வளவுதூரம் நீதித்துறை மீது துணிச்சலோடு அதிகாரத்தில் உள்ளவர்கள் கைவைக்கின்றனர். ஆனால் அப்படி நீதித்துறையின் மீது கைவைத்தால், அது ஊழ்வினையாக வந்து உறுத்தும் என்பதை மக்கள் போராட்டங்களே உணர்த்தவேண்டும். எனவே நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதி செய்வதற்காக இன்று அனைவரும் கரம்கோர்க்கவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

நேர்மறை எண்ணங்களே சாதனைக்கு வழிகாட்டும்...

–ஹெலன் கெல்லர்–




# முல்லை. நீதிபதி விவகாரத்தில் உண்மையைத் தெளிவுபடுத்துக!

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



**கொழும்பு, ஒக்.4**

**உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி விலகிய விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தி, அதன் பின்புலம் குறித்து நாடாளுமன்றத்துக்கு உண்மையைத் தெளிவுபடுத்துங்கள்.**

- இவ்வாறு நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகல் பாரதூரமான விடயமாகும். நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பான பிரச்சினையாகும். தன்னால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை அடிப்படையாகக்கொண்டு மரண அச்சுறுத்தல், அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன என அவர் அறிவிப்பு விடுத்துள்ளார். இது தொடர்பில் சுயாதீன விசாரணையை முன்னெடுத்து, அதன் பின்புலம் தொடர்பில் நாடாளுமன்றத்துக்குத் தெளிவுபடுத்துங்கள் -என்றார். (எ-44)

# எதிர்ப்பை வெளிப்படுத்த கரங்களை இணையுங்கள்

## அவைத் தலைவர் அழைப்பு



கொழும்பு, ஒக்.4


முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகளால் இன்று முன்னெடுக்கப்படும் மனிதச் சங்கிலிப் போராட்டம் வெற்றி அளிப்பதற்கு தமிழ் மக்கள் தங்கள் பூரணமான ஆதரவை வழங்கவேண்டும் என வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மருதனார்மடம் சந்தியில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் மனிதச்சங்கிலி ஆர்ப்பாட்டம் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி முட்டாஸ் கடைச் சந்தியில் முற்பகல் 10 மணியளவில் நிறைவடையவுள்ளது. அனைத்துத் தமிழ் மக்களும் கட்சி பேதங்களை கடந்து எமது முழுமையான எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் மனிதச்சங்கிலி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (எ-இ)

**நாளை** 05.10.2023 வியாழக்கிழமை புரட்டாதி 18

சுபநேரம் : 07.32 - 09.02
ராகுகாலம் : 01.32 - 03.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சட்டம், ஒழுங்குகளைக் கவனிக்காத விசித்திர மாவட்டம் யாழ்ப்பாணம்

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஒக்.4**

**சட்டம், ஒழுங்குகளைக் கவனத்தில் கொள்ளாத விசித்திர மாவட்டமாக யாழ்ப்பாண மாவட்டம் இருக்கின்றது. நாட்டில் எங்கும் இல்லாத வகையில் சட்டத்துக்கு மாறான செயற்பாடுகளை மேற்கொள்வதில் ஒரு பகுதியினர் பழக்கப்பட்டுவிட்டனர் - இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எத்தகைய சவால்கள் ஏற்பட்டாலும் மாவட்டத்தின் சட்டஒழுங்குகளைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டிய கட்டாயம் இருக்கிறது. சட்டத்துக்கு மாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஒரு பகுதியினர் பழக்கப்பட்டுள்ளனர். மரக்கறிச் சந்தைகளில் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு நிறைக் கழிவு முறைமை யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரமே காணப்படுகின்றது.

அதேபோன்று பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற முச்சக்கர வண்டிகள் கட்டண மீற்றர் பொருத்தியிருக்கவேண்டுமென்பதும் நாடளாவிய ரீதியில் காணப்படும் சட்ட ஏற்பாடாக இருக்கின்றபோதும், அதை ஏற்றுக் கொள்வதற்கு இங்குள்ளவர்கள் பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனர்.

நாட்டின் சட்டங்களை அனைவரும் ஏற்றுக்கொண்டு நடக்கத் தவறும் பட்சத்தில் அவ்வாறானவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வது தவிர்க்க முடியாதது - என்றார்.

சட்ட விரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவது, மணல் அகழ்வுக்குப் பொருத்தமான இடங்களில் இருந்து மணல் விநியோகத்தை மேற்கொள்ளவதற்கு காணப்படும் சவால்களைக் கட்டுப்படுத்துவது, சட்டவிரோத கடற்றொழில்செயற்பாடுகள்மற்றும்போதைப் பொருள் பரவலைக் கட்டுப்படுத்துவது, முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தும் செயற்பாடுகளை விரைவுபடுத்துவது போன்ற விடயங்கள் இந்தக் கூட்டத்தில் பேசப்பட்டன. (எ-27)

அளவெட்டியில் டெங்குச் சோதனை

# 25 குடியிருப்புகளுக்கு சிவப்பு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஒக்.4

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட அளவெட்டி தெற்கில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு களத் தரிசிப்பின்போது 25 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டுப் பகுதிகளில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் அளவெட்டி தெற்கில் டெங்கு நுளம்பு பெருகும் வகையில் பராமரிப் பின்றிக் காணப்பட்ட 25 காணிகள் இனம் காணப்பட்டு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டு ஒரு வாரகால அவகாசம் வழங்கப்பட்டது.

இந்தக் கால அவகாசத்தினுள் காணிகள் துப்புரவு செய்யப்படாதுவிடின் காணி உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சுகாதார அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டது. (ச-36)



# பருத்தித்துறையில் சிறுவர் பூங்கா

யாழ்ப்பாணம், ஒக். 4

பருத்தித்துறை கல்லூரி வீதியிலுள்ள தாமரைக்குளத்தடியில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா மற்றும் களஞ்சிய அறை என்பன கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டன. அமரர் சுப்பிரமணியம் இராஜரட்ணம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் இந்த சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. தாமரைக்குளத்தடி நற்பணி மன்றத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறுவர்களது நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-100)

# றோட்டறிக் கழகத்தால் மன்னாருக்கு உதவிகள்

மன்னார் றோட்டறிக் கழகத்தினரின் முயற்சியில் இந்தியா றோட்டறிக் கழகத்தினரால் பல்வேறு உதவித் திட்டங்கள் மன்னார் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் றோட்டறிக் கழகத்தினருக்கும் இந்திய றோட்டறிக்கழகத்தினருக்குமான இணைப்புக் கலந்துரையாடல் மன்னார் றோட்டறிக் கழகத்தின் தலைவர் பொறியியலாளர் றொபேட் பீரிஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி உதவித்திட்டங்களும் வழங்கப்பட்டன.

மன்னார் நறுவிலிக்குளம் மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலையின் சித்த மருத்துவ அத்தியட்சகர் வைத்தியர் தர்ஷனோதயனின் வேண்டுகோளுக்கு அமைவாக நோயாளர்களுக்குத் தேவையான 15 கட்டில்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், அடம்பன் விளையாட்டுக் கழகத்தினருக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள், திருக்கேதீச்சரம் மற்றும் துள்ளுகுடியிருப்பிலுள்ள கார்மேல் அருட்சகோதரிகளால் நடத்தப்படும் பெற்றோரை இழந்த பெண்பிள்ளைகள் மற்றும் பராமரிப்பற்ற பெண்பிள்ளைகள் ஆகியோருக்கான பாடசாலை உபகரணங்கள் என்பனவும் இதன்போது வழங்கப்பட்டன. (ம-213)

வடக்குப் பாடசாலைகளில்

# நீண்டகாலமாக நிரப்பப்படாதுள்ள கல்விசாரா அலுவலர் வெற்றிடம்

## கல்விச் சமூகம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 4

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கல்விசாரா அலுவலர்கள் பதவிகள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் வெற்றிடமாகக் காணப்படுவதால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகப் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கல்விசாரா பதவிகளான ஆய்வுகூட உதவியாளர், நூலக உதவியாளர், தகவல்தொழில்நுட்பப் பாட உதவியாளர், காவலாளி, சுத்திகரிப்புத் தொழிலாளர் உள்ளிட்ட பதவிகள் நீண்டகாலமாக மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நிரப்பப்படவில்லை.

ஏனைய மாகாணங்களில் ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் நியமனம் வழங்கப்பட்டு வரும் நிலையில் வடக்கு மாகாணத்தில் அவை வெற்றிடமாகவே காணப்படுகின்றன.

இதுதொடர்பில் உரிய தரப்புகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லை.

எனவே மாணவர்களின் கல்வி நிலையில் பாதிப்பு ஏற்படாத வகையில் வடக்குப் பாடசாலைகளில் காணப்படும் கல்விசாரா ஊழியர் வெற்றிடங்களை விரைந்து நிரப்புவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பாடசாலை வட்டாரங்கள் குறிப்பிட்டன. (ச-9)



# கைக்குண்டு, எறிகணை மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கரம்பகத்தில் கைக்குண்டு மற்றும் மோட்டார் எறிகணை என்பன நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன. தனியார் காணி ஒன்றில் இருந்து இவை மீட்கப்பட்டுள்ளன.

அவற்றை நீதிமன்ற அனுமதி பெற்றுச் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-125)

# 'நெருக்கடி சூழ்நிலைகளில் கல்வி' யாழ்.பல்கலையில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ. நித்திலவர்ணன் எழுதிய 'நெருக்கடியான சூழ்நிலைகளில் கல்வி' எனும் நூல் வெளியீடு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விப்பீட கல்வியியல்துறைத் தலைவர் கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரையை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா, நூல் அறிமுகவுரையை கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், நூல் மதிப்பீட்டு உரையை பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் ஆகியோர் அதிதிகளாகப் பங்கேற்று ஆற்றவுள்ளனர்.

ஏற்புரை மற்றும் நன்றியுரையை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ. நித்திலவர்ணன் நிகழ்த்தவுள்ளார். (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்டண அதிகரிப்புகளால் ஐ.எம்.எப். திருப்திகொள்ளாது

## மரிக்கார் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.4

**ஆசியாவிலேயே மின் கட்டணம் உயர்வாகக் காணப்படும் நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளது. அதன்பின்னரும் எதிர்பார்த்த வருமானம் கிடைக்காததால் மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்டணங்களையும், வரிகளையும் அதிகரிப்பதால் சர்வதேச நாணயநிதியத்தை திருப்திப்படுத்திவிடமுடியாது. நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படவுள்ள 333 மில்லியன் டொலரை விட அதன் மூலம் சர்வதேசத்தின் மத்தியில் கிடைக்கும் அங்கீகாரமே முக்கியமானது.

மீண்டும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் தென் ஆசியாவிலேயே உயர் மின் கட்டணத்தைக் கொண்ட நாடாக இலங்கை விளங்கும். நாட்டின் நிலைமை தொடர்பில் அடுத்த 100 நாள்களுக்கு ஆழமாகச் சிந்தித்துச் செயற்படாவிட்டால் கோத்தாபய ராஜபக்சவுக்கு நாட்டிலிருந்து தப்பிச் செல்லக் கிடைத்த வாய்ப்புக் கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைக்காது.

சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தொகை 333 மில்லியன் டொலர் மாத்திரமேயாகும். அதைவிட அதிக தொகை அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளமாக் வழங்கப்படுகிறது. இங்கு நாணய நிதியத்தின் கடன் தொகையைவிட, அதனால் சர்வதேசத்தின் மத்தியில் கிடைக்கும் நம்பிக்கையே முக்கியத்துவமுடையதாகும்.

இரண்டாம் கட்டக் கடன் தொகை கிடைக்கப் பெற்றால் இலங்கை முதலீடுகளுக்குச் சிறந்த நாடு என்ற அங்கீகாரம் கிடைக்கும். வருமானத்தை அதிகரிப்பதை விடுத்து, கட்டணங்களையும் வரிகளையுமே அரசாங்கம் அதிகரித்துள்ளது. அவற்றை அதிகரிப்பதால் நாணயநிதியத்தை திருப்திப்படுத்திவிட முடியாது - என்றார். (எ-இ)

# விமான ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு 'கட்'

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.4

கடந்த சில நாள்களில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானப் பயணங்கள் தாமதமாகியதன் காரணமாக சுமார் 6 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளது. அதனால் விமான ஊழியர்களுக்கு தற்சமயம் கொடுப்பனவு அல்லது சம்பள அதிகரிப்பை வழங்கமுடியாது.

- இவ்வாறு துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானங்கள் கடந்த சில நாள்களில் சரியான நேரத்தில் பயணிக்கத் தவறியமை தொடர்பாகவும், அதனால் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் தொடர்பாகவும் விமானத்துறை அமைச்சர், சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிர்வா கத்தினர் மற்றும் அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச சட்டங்களுக்கமைய, ஒரு விமானி மாதத்திற்கு 100 மணிநேரம் விமானத்தைச் செலுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. எமக்குக் கிடைத்த அறிக்கைகளின்படி, கடந்த காலங்களில் நாட்டின் விமானி ஒருவர் மாதத்திற்கு சுமார் 60 மணிநேரம் மாத்திரமே விமானத்தைச் செலுத்தியுள்ளார். ஒரு விமானி மாதத்துக்குக் குறைந்தது 80 மணிநேரம் பறந்திருந்தால், இத்தகைய சிக்கல் ஏற்பட்டிருக்காது. உயர்தர விமானச் சேவையை வழங்குவதில் எமக்கு பெரும் பொறுப்பு உள்ளது, சிறிலங்கன் எயார்லைன்ஸின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் வேறு விமான நிறுவனங்களுக்கு இந்த விமானங்களை இயக்குவதற்கான உரிமையை வழங்கத் தீர்மானித்துள்ளேன் - என்றார்.

இதேவேளை, விமானங்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகளே இந்தக் காலதாமதத்துக்குக் காரணம் எனப் பொறியியலாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளபோதும் தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபை தெரிவித்துள்ளது என்று கூறப்படுகிறது. (எ-இ)

# ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸிடம் உதவி கோருவதை மறந்த ரணில்!

கொழும்பு, ஒக்.4

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்விசாரணைகளுக்கு ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸாரின் உதவியை பெறப்போவதாகக் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். எனினும் இதுவரை அதற்கான உத்தியோகபூர்வ கோரிக்கைகள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்பு கவுன்சிலின் முன்னாள் உறுப்பினரும்,ஐ.நா.வுக்கான முன்னாள் அமெரிக்கப் பிரதிநிதியுமான சமந்தா பவர் முன்னிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸாரின் உதவி பெறப்படும் என்று அறிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் மறைகரங்கள் இருந்தனவா என ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸாரின் அறிக்கையைப் பெற்று தீர்மானிக்கப் போவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் உள்ளூர்க் குழு ஒன்று சம்பந்தப்பட்டிருப்பதாகவும் அந்தக்குழுவின் பின்னால் மறைகரம் ஒன்று செயற்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)



# 'சனல் - 4' பெயரைக் கேட்டதும் சத்தம் போட்ட ஜனாதிபதி!

'சனல் -4' ஊடகத்தை ஏன் புனிதமாகக் கருதுகின்றீர்கள் என இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீற்றத்துடன் ஊடகவியலாளரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

டி டபிள் யூ நியூஸ்க்கு வழங்கிய நேர்காணலிலேயே ஜனாதிபதி இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கும் அரசாங்க உறுப்பினர்களுக்கும் தொடர்புள்ளது என்று 'சனல் -4' வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பாக செய்தியாளர் கேள்வி எழுப்பியதை அடுத்தே ரணில் விக்கிரமசிங்க சீற்றமடைந்துள்ளார்.

நீங்கள் ஏன் 'சனல்- 4' புனிதமானது எனக் கருதுகின்றீர்கள்? என ஜனாதிபதி சீற்றத்துடன் கேள்வி எழுப்பினார்.

அதற்கு செய்தியாளர் நான் அவ்வாறு செயற்படவில்லை எனத் தெரிவித்தார்.

பிரிட்டனில் பலர் அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர் ஏன் நீங்கள் 'சனல் -4' ஐ மாத்திரம் கருத்தில் கொள்கின்றீர்கள் என ரணில் விக்கிரமசிங்க கூறினார். அதற்கு செய்தியாளர், உறுதியான வலுவான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன எனப் பதிலளித்தார்.

ஊடகங்கள் குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கின்றன என்பதற்காக நான் எதையும் செய்யமுடியாது என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் சட்டமா அதிபர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார் சி.ஐ.டி யின் முன்னாள் அதிகாரி குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார் ஏன் அவை பற்றிக் கேள்வி எழுப்பக் கூடாது என ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார். (எ-இ)

# ஜனாதிபதி வேட்பாளர் அறிவிப்பால் குழப்பம்

கொழும்பு, ஒக்.4

தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித்பிரேமதாஸவின் பெயரை ஐக்கிய மக்கள் சக்தி முன்கூட்டியே அறிவித்துள்ளமை தவறான முடிவாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே வேட்பாளரை பெயரிட்டிருக்க வேண்டும். அதுவும் மக்கள் மன நிலையை அறிந்து, வெற்றிபெறக்கூடிய வேட்பாளரையே களமிறக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கட்சியின் அரசியல் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும்.

வெற்றிபெறக்கூடிய வேட்பாளரையே ஐக்கிய மக்கள் சக்தி களமிறக்கவேண்டும், ஜனாதிபதி வேட்பாளரை முன்கூட்டியே அறிவித்த கட்சியின் முடிவுதவறாகும். ஒரு வருடத்துக்கு முன்னரே அறிவிக்கப்பட்டதால் மக்களின் மன நிலை மாறக்கூடும். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட காலப்பகுதியில் சஜித்தான் வெற்றி வேட்பாளர் எனில் அவர் நிச்சயம் களமிறங்கவேண்டும். அப்போது நாமும் அவருக்கு ஆதரவாக செயற்படுவோம். மக்கள் ஆதரவு இல்லாதசூழ்நிலையிலும் சஜித் களமிறக்கப்பட்டால், நான் ஒதுங்கி நிற்பேன். தீர்க்கமான அரசியல் முடிவை எடுப்பேன்.

அடுத்து நடைபெறும் தேர்தல்தான், நான் போட்டியிடும் கடைசித் தேர்தலாக அமையும். அதன்பின்னர் தேர்தல்களில் போட்டியிடப்போவதில்லை- என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதச் சங்கிலிக்கு முன்னணியும் ஆதரவு



யாழ்ப்பாணம், ஒக். 4

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ள இன்றைய மனிதச் சங்கிலி போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு வழங்கப்பட்ட அழுத்தம் மற்றும் அவரது பதவி விலகல் என்பன சிறிலங்காவின் நீதித்துறை கட்டமைப்புச் சுயாதீனமாக இல்லை என்பதனை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

சிறிலங்காவின் நீதித்துறை சிங்கள - பௌத்த மேலாதிக்கத்துக்கும், அதே மேலாதிக்கத்தின் பெயரால் நாட்டை நாசம் செய்தவர்களையும் சூறையாடியவர்களையும் கொலையாளிகளையும் சுதந்திரமாக நடமாட வைத்துள்ளது. இந்த விடயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் சம்பவமாகவே நீதிபதி ரி.சரவணராஜாவின் சுயாதீன செயற்பாட்டுக்கு இடையூறான சட்டமா அதிபரின் தலையீடுமற்றும்புலனாய்வாளர்களது அச்சுறுத்தல்கள் என்பன அமைந்திருக்கின்றன.

சிறிலங்காவின் அரச கட்டமைப்பு, நீதி கோரும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் அதற்காகக் குரல் கொடுத்த சட்டத்தரணிகளையும் அச்சுறுத்தி வந்ததன் தொடர்ச்சியாக, இன்று நீதிபதிக்கே அச்சுறுதல் விடுத்து தீர்ப்பை மாற்றக்கோரும் அளவுக்கு மோசமாக செயற்பட்டிருக்கிறது. இந்த நிலைக்கு எதிராக தமிழ் மக்கள் எழுச்சி அடைய வேண்டும். இதற்காக நீதிகோரி நடத்தப்படும் போராட்டங்களில் தமிழ் மக்களை கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம-100)

# நீதி மீதான அச்சுறுத்தல் தொடர்கதையாகின்றது!

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் சுட்டிக்காட்டு**

இலங்கையின் நீதித்துறை அரச கட்டமைப்புகளால் சவாலுக்கு உட்படுவது இது முதல்முறையல்ல. நீண்ட தொடர்கதையின் மற்றொரு கசப்பான பதிவுதான் நீதிபதி சரவணராஜாவுக்கு நிகழ்ந்த விடயம் என்று யாழ்ப்பணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

யாருக்கும் அடிபணியாமல் நீதி வழுவாது தீர்ப்புகளை வழங்கிய முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா, அரசியல் அழுத்தங்களாலும் உயிர் அச்சுறுத்தல் காரணமாகவும் மனஅழுத்தத்துக்கு உள்ளாகி விரக்தியால் பதவிவிலகி நாட்டைவிட்டு வெளியேறியுள்ளமை அனைவர் மத்தியிலும் அதிர்வலைகளை உள்ளாக்கியுள்ளது. இந்த நிகழ்வு இலங்கை நாட்டின் நீதிப் பொறிமுறையின் சுயாதீனத் தன்மை அற்ற நிலையை மீண்டும் ஒரு தடவை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. இது போன்று யாழ். பல்கலைக்கழக சட்டத் துறை விரிவுரையாளர் கலாநிதி குருபரனும், அரச படைகளால் நிகழ்த்தப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு ஒன்றில் முன்னிலையானதற்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு புதிய சுற்றறிக்கை ஒன்றினை வெளியிட்டு வழக்கிலிருந்து விலக நெருக்கடி கொடுத்தது. இதையடுத்து அவர் விரிவுரையாளர் பதவியினைத் துறந்திருந்தார். இதனை நினைவுபடுத்தவும், நாட்டின் இன்றைய நிலைக்கும், இனப்பிரச்சினைக்கும் சுயாதீனமற்ற நீதித்துறையும் ஒரு காரணமாகும் என்பதனை சுட்டிக்காட்டவும் நாம் விரும்புகின்றோம்.

நீதித்துறையை மட்டுமல்ல இலங்கை அரச இயந்திரத்தின் சகல துறைகளும் அரசினதும் பேரினவாத சக்திகளினதும் அரசியல் அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகின்றமை என்பது புதிய விடயமல்ல. காலாகாலமாக நடைபெறுகின்ற ஒரு விடயமே. இதனால்தான் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், இறுதிப் போர் உள்ளிட்ட பல சம்பவங்களுக்கு உள்ளக விசாரணையை மறுத்து சர்வதேச விசாரணையை பாதிக்கப்பட்ட தரப்புகள் கோருகின்றன.

எனவே இலங்கை மற்றும் சர்வதேச முற்போக்கு சக்திகள் இணைந்து இந்த நிலையைச் சீர்செய்ய, நீதித்துறை உள்ளிட்ட அரச இயந்திம் அனைத்தும் சுயாதீனமாக இயங்க காத்திரமான செயற்பாட்டை முன்னெடுத்து இலங்கையை முன்னோக்கிப் பயணிக்க உதவிட பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அழைக்கின்றது - என்றுள்ளது. (ம-20)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 . 06 . 1945

மறைவு 27 . 09 . 2021

**அமரர் திரு. சிவகுரு அரியரத்தினம்**

(சாவகச்சேரி, பிரபல வெற்றிலைக் கடை அரியம்)

திதி: புரட்டாதி திங்கள் தேய்பிறை ஷஷ்டி

ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவுகொண்டு
குடும்ப உறவுகளைப் பிணைத்த வேரென இருந்து
நல்வழிகாட்டி எமை நன்றாக வளர்த்த எம் அன்புத்
- தந்தையே !

எமைவிட்டுப் பிரிந்து ஈராண்டு சென்றாலும்
நெஞ்சமெனும் சிம்மாசனத்தில் என்றும் நீங்காது
- வீற்றிருப்பீர்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்

கல்வயல்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
077 669 1290

## 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 • 09 • 1927

உதிர்வு 12 • 10 • 2006

**அமரர் இராசரத்தினம் இரத்தினவேல் (J.P)**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

திதி: அபரபக்க சஷ்டி

அன்புமொழி பேசி ஆயிரம் கதைகள் சொன்னீர்
ஆலமரமாகி அனைவருக்கும் நிழல் தந்தீர்
பண்பு என்ற சொல்லின் பாலம் நீங்கள்
கடமை மறவாத காரிய வீரர் ஐயா!
ஆண்டுகள் பல கடந்தாலும் நீங்காது உங்கள் நினைவு.

அரசவிதி, உரும்பிராய். (cs 52340)(N.1)

குடும்பத்தினர்

## உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் 2023

மேற்படி எமது சங்க பொதுக் கூட்டம் இம்மாத இறுதியில் நடைபெற இருப்பதால் சங்க உறுப்பினராக விரும்பும் பழைய மாணவர்கள் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தை கல்லூரி அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து ஆயுள் சந்தா ரூபா 1000/= த்துடன் கையளிக்கவும்.

மேற்படி கூட்டத்தில் விவாதிக்கப் படவேண்டிய பிரேரணைகள் ஏதும் இருப்பின் 20.10.2023 இற்கு முன் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.

தலைவர் செயலாளர்

உரும்பிராய் இந்து கல்லூரி
பழைய மாணவர் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு." - வள்ளுவர்



## தர்மத்தைக் காப்பதில் தோல்வியடையும் கல்வி!

சாம் ரமேஸ்குமார்

பண்டையகால கல்விச் சிந்தனையானது மனித வாழ்வினுடைய எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் தர்மத்தை வளர்க்கும் இலட்சியத்தைக் குறிக்கோளாகக்கொண்டு எல்லையில்லாத் தூரம் பயணித்தது. தர்மத்தையும் அதனைச் சார்ந்து வாழும் மேன் மக்களையும் படைபோல் எப்போதும் அது காத்துநின்றது. அதனால்தான் உபநிடஷத்துக் கால ஞானிகளிடம் அவர்களின் சீடர்கள் வாயால் கேட்கும் கேள்விகள் மூலமாகவும், செவிகளால் தொடர்ச்சியாகக் கேட்பதன் மூலமாகவும், அதி சிறப்பு வாய்ந்த கிரகித்தல் மூலமாகவும் அவர்களின் பாதங்களைப் பணிந்து நின்றே தங்கள் கல்வி ஞானத்தை விசாலமாக தம் அறிவுக்குள் பெருக்கிக் கொண்டார்கள். ஆனால் இன்றைய நவீன நாகரிகத்தில் கல்விச் சிந்தனையானது செவிகளின் வழியாகவும், விழிகளின் வழியாகவும், ஏடுகளின் வழியாகவும், நவீன கற்கைக் கருவிகளின் வழியாகவும் அபிவிருத்தி அடைந்திருக்கின்றது. இருந்தும் பெயரளவில் ஒவ்வொரு நாடுகளிலும் அதன் தரம் உயர்ந்து இருக்கிறதே தவிர, அது தர்மத்தைக் காத்து நிற்பதற்கான பண்பை இழந்து நிற்கின்றது என்பதே பெரும் உண்மையாகும்.

### கல்வி என்பதென்ன?

கல்வி என்றால் அதன் பொருள் "கருணை" என்றே பண்டைய காலம் முதல் பல கல்விச் சிந்தனையாளர்களால் அர்த்தப்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்தக் கருணை கல்வி கற்றவனிடத்தில் இன்று இருக்கின்றதா? என்றால் 'முற்றாக இல்லை' என்றே ஏற்றுக்கொள்ளவேண்டும். அதனால்தான் இராமகிருஷ்ண பரமஹம்சர் 'ஏட்டுச் சுரக்காய் ஒருபோதும் கறிக்கு உதவாது' என்று அடிக்கடி தன் சீடர்கள் மத்தியில் போதனை செய்வார். உண்மையில் ஏட்டுக் கல்வியானது வயிற்றுக்கும் இவ்வுலகின் நிரந்தரமற்ற சொகுசு வாழ்க்கைக்கும்தான் அது வழி வகுக்கின்றதே தவிர, யதார்த்த பூர்வமான சத்திய வாழ்க்கைக்கு அது ஒருபோதும் வழங்குவதே இல்லை என்பது அவர் வாதம். அதுவே கல்வியின் சமகால நிலமையும் கூட.

ஒரு படிக்காத பாமரனிடம் இருக்கும் மனதின் கசிவு கூட, படித்துப் பல பட்டங்கள் பெற்றுப் பல பதவிகளை அலங்கரிக்கும் கல்வியியலாளர்களின் மனதில் கடுகளவும் இல்லை என்பது நவீனக் கல்விக் கொள்கையில் ஒரு பெரும் குறையாகவே இருந்து வருகின்றது. இன்றைய நவீனக் கல்விக் கொள்கையின் சிந்தனையாளர்களாக தங்களை சமூகத்துக்குக் காட்டிக் கொள்பவர்கள் ஒற்றுமையில் வேற்றுமையை உருவாக்கி தங்கள் சுய லாபத்துக்காக இனவாதம், மதவாதம் என்ற பிரிவினை ஊடாக தர்மத்தையும் தேசத்தின் செங்கோலையும் தற்காலிகமாகவேனும் வலுவிழக்கச் செய்யும் கைங்கரியத்தில்தான் நாட்டம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். எழுதப் படிக்கத் தெரியாதவன்தான் தன் இனத்துக்காகவும், மதத்துக்காகவும், உரிமைக்காகவும் போராடுகிறானே தவிர, தன்னை நவீன கல்விச் சிந்தனையாளன் எனக் கூறிக் கொள்ளும் ஒவ்வொருவனும் நாட்டைக் கூறுபோடுவதிலும் எப்படியெல்லாம் ஊழல் செய்யலாம் எனச் சிந்திப்பதிலுமே தன் கல்விச் சிந்தனையை பயன்படுத்துகிறான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

### கல்வியின் இலக்கென்ன?

உண்மையில் பண்டைய காலம் முதல், மனிதக் கல்வியின் அதி உயர் இலக்காக இருந்து வருவது மனிதனுக்குள் உறைந்து போயிருக்கும் இறையுணர்வை ஒவ்வொரு மனிதனும் தன் உள்ளுணர்வுக்குள் பரிபூரணமாக எப்போதும் உணர்ந்து உலகத்தை தர்மம் கொண்டு வேலி போல் காத்து நிற்பதற்குத்தான் என்பதை கல்வி கற்கும் சமகால மாணவச் சமூகம் புரிந்துகொள்ள முற்படவேண்டும். ஆனால், இன்றைய கல்வி மனித தர்மத்தை காத்து நிற்பதற்குப் பதிலாக, அதன் பெயரில் பணத்தை பைகளில் நிரப்புவதற்கும், அப்படி நிரப்பியதை நிரந்தரமாய் தேக்கி வைப்பதற்கும் பல பாதைகளைத் தேடுகிறதே தவிர, அதன் நிரந்தரமற்ற தன்மையை உணர மறுப்பது வெறும் வேடிக்கையாகவே இருக்கின்றது.

நாம் கற்ற கல்வியானது இறை ஞானத்தைத் தரவேண்டும்.

அத்தோடு தர்மத்தைக் காப்பதற்கும் துணை நிற்க வேண்டும். அந்தக் கல்வியானது அகங்காரத்தை மட்டும் வளர்த்தால் அது கல்வி அல்ல. அதுவும் ஒரு வகை போதை என்றே தர்மத்தால் நிச்சயம் நகைக்கப்படும்.

**இன்றைய நவீனக் கல்விக் கொள்கையின் சிந்தனையாளர்களாக தங்களை சமூகத்துக்கு காட்டிக் கொள்பவர்கள் ஒற்றுமையில் வேற்றுமையை உருவாக்கி தங்கள் சுய லாபத்துக்காக இனவாதம், மதவாதம் என்ற பிரிவினை ஊடாக தர்மத்தையும் தேசத்தின் செங்கோலையும் தற்காலிகமாகவேனும் வலுவிழக்கச் செய்யும் கைங்கரியத்தில்தான் நாட்டம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.**

**எழுத படிக்கத் தெரியாதவன்தான் தன் இனத்துக்காகவும், மதத்துக்காகவும், உரிமைக்காகவும் போராடுகிறானே தவிர, தன்னை நவீன கல்விச் சிந்தனையாளன் எனக் கூறிக் கொள்ளும் ஒவ்வொருவனும் நாட்டைக் கூறுபோடுவதிலும் எப்படியெல்லாம் ஊழல் செய்யலாம் எனச் சிந்திப்பதிலுமே தன் கல்விச் சிந்தனையை பயன்படுத்துகிறான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.**



புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புகள் விமர்சனங்கள், கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளைப் பிரசுரிக்க ஒரு வாய்ப்பு. அனுப்ப வேண்டிய முகவரி: புதன்பொய்கை உதவியர், 36 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். மின்னஞ்சல் முகவரி: puthanpoigai@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை



நடராசா கோபிராம்
உளவியல்துறை மாணவன்
2ஆம் வருடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது என்கின்றார் முதுபெரும் தமிழறிஞர் ஔவையார். அத்தகைய மேன்மையுற்ற மனிதப்பிறப்பை - வாழ்வை இன்று தாமாக முடித்துக்கொள்ளும் போக்கு நாளுக்குநாள் அதிகரித்தே வருகின்றது.

தற்கொலை என்பது நம்மை நாமே கொலை செய்து கொள்வதாகவெ பொருள்படும். தற்கொலைகளைத் தடுப்பதில் இன்று உலக நாடுகள் அனைத்துமே தோல்வியடைந்திருக்கின்றன. உலக சுகாதார ஸ்தாபனத்தின் தற்போதைய ஆய்வுகளின்படி வருடத்துக்கு 8 லட்சத்துக்கும் அதிகமானோர் தற்கொலை செய்கின்றனர். அதாவது 40 செக்கனுக்கு ஒரு நபர் என்ற ரீதியில் ஒருவர் தன் வாழ்வை வலிந்து முடித்துக் கொள்கின்றார்.

மனச்சோர்வு, பொருளாதாரப் பிரச்சினைகள், போதைப்பொருள் பாவனை, சமூக வலைத்தள மோசடிகள், மனநலப் பிரச்சினைகள், காதல் தோல்வி, குடும்ப உறவுகளில் ஏற்படும் பிரச்சினைகள், தொழில்நுட்ப சாதன ஆளுகை, குழந்தைப்பருவம் முதல் வெளிப்படும் தவறான அழுத்தங்கள் என ஏகப்பட்ட காரணங்களை இந்தத் தற்கொலைகள் நேர்வதில் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஆனால், தற்கொலைகள் தவிர்க்கப்படவோ தடுக்கப்படவோ முடியாதவையல்ல. சீரான தொடர்பாடல், உளவள நிபுணத்துவ உதவியைப் பெறுதல், ஆலோசனை மையங்களை நிறுவுதலும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுதலும், வாழும் திறன்களை வளர்த்துக்கொள்ளுதல், கல்விமுறை மற்றும் சுயமரியாதை மேம்பாடு, போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டங்கள், சுயகட்டுப்பாடு மற்றும் தன்னம்பிக்கையை மேம்படுத்தும் திட்டங்கள், தியானம் யோகாசனம் மற்றும் உடற்பயிற்சி செய்தல், ஆன்மிகக் கட்டமைப்பைப் பலப்படுத்தல் இவ்வாறான திட்டங்களை நடைமுறைப் படுத்துவதன்மூலம் தற்கொலைகளைத் தடுக்கமுடியும்.

ஆண்- பெண், இரவு - பகல், இன்பம் - துன்பம், வாழ்வு - தாழ்வு, பிறப்பு - இறப்பு என அனைத்தையும் இரண்டாகத் தந்த இறைவன் சிக்கல்தீர்வு என்ற இரண்டையும் தந்துள்ளான்.

ஆதலால் ஒரு சிக்கல் ஏற்பட்டாலும் உரிய தீர்வை நாம் போராடிப் பெறவேண்டியது அவசியம். ஏனெனில் பிரச்சினையை எதிர்கொண்டு அதனை வெற்றிகொண்டு வாழ்வதனாலேயே இப்போட்டி நிறைந்த உலகில் வாழ முடியும். வாழ்க்கை மீது நாம் எப்போதும் பெரிய நம்பிக்கை கொள்ள வேண்டும். ஏனெனில் அடுத்த நொடி என்ன நடக்கும் எனத் தெரியாத சுவாரஸ்யமான விளையாட்டுத்தான் வாழ்க்கை. வாழ்க்கை நமக்கு வரப்பிரசாதம் ஆகும். நம்பிக்கையுடன் வாழ்ந்தால் நலமான, சிறப்பான வாழ்க்கையை வாழலாம்.



## பாரம் சுமக்கும் பட்டாம்பூச்சிகள்

பள்ளிக்குழந்தைகள் யாவும்
ஏர் பூட்டிய மாடுகள் அல்ல
அழகிய வண்ணத்துப்பூச்சிகள் அவற்றின்
இறக்கைகளைப் பறக்க விடுங்கள்

கருப்பைகளின் பாரம்கூட
பத்து மாதங்களில் முடிந்து விடும்
புத்தகப் பைகளின் சுமைகளோ
முடியாது பத்து வருடங்களாகினும்

மாணவர்களுக்குப் பாடச்சுமை
பெற்றோருக்குப் பணச்சுமை
குருவுக்கு பணிச்சுமை
உறக்கம் வந்தும் கூட
மூட மறக்குது இமை

பிஞ்சுகளின் துன்பம்கண்டு
துடிக்கவில்லையா இதயம்
தாய்மாரின் இதயம்கூட
கல்லானதா கலிகாலத்தில்

திருமதி. தர்சினி யூட்அமல்ராஜ்
கம்சப்பிரியா இசைக்கல்லூரி

# 'திறப்பு'



## மூடிய நம் மனக் கதவுகளைத் திறக்கும் மென்கருவி

கூண்டிலிட்டு வளர்த்த பறவைகளை வான்பரப்பில் பறக்கவிட்டதுபோல் அங்கலாய்த்து அலையும் நம் இளம் சமூகத்தினரை பண்படுத்த உதவும் ஒரு நூலாக 'திறப்பு' என்ற நேர்வயமான சிந்தனைகளை உள்ளடக்கி வெளிவந்துள்ள நூலை காலத்தின் தேவை கருதிய ஒரு பணியாகவே பார்க்க வேண்டும். பூநகரி மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றும் ஆ.ஜென்சன் றொனால்ட் ஒரு சுகாதார முகாமைத்துவ முதுமானிப் பட்டதாரி. கவிஞர் சூரியநிலா என்று இலக்கியப் பரப்பில் அறியப்பட்ட இவர் தன் பணியோடும் பட்டப் படிப்போடும் இணைந்த ஒரு விடயப்பரப்பை நூலாக்கித் தந்துள்ளார். நம்பிக்கையற்ற வாழ்வும் இலக்கற்ற பயணங்களுமாகத் தொடரும் வாழ்க்கை முறையில் சிறு சிறு தோல்விகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்க முடியாமல் தற்கொலைகளாலும் சமூகவிரோத நடத்தைகளாலும் சிக்குண்டு தவிக்கும் எமது சமூகத்தின் மனங்களைத் திறந்து ஒரு நேர்வயமான பாதையைக் காட்டும் சிறந்த நூலாக இந்தத் திறப்பு என்ற சிந்தனைக் களஞ்சியம் அமைந்துள்ளது.

இந்நூலில் இடம்பிடிக்கும் தலைப்புகள் யாவும் மனிதனைப் பண்படுத்தி நேர்வழியில் இட்டுச் செல்லும் தலைப்புகளாகவே காணமுடிகின்றது. எமது வாழ்க்கையென்ற பொக்கிஷத்தின் நாம் தரிசிக்க மறந்த அல்லது மறுக்கின்ற பக்கங்களைக் காண்பித்து அதனைப் பயனுறு வகையில் பயன்படுத்த வழிகாட்டும் நூலாக இதனை எடுத்துக் கொள்ளலாம். இலத்திரனியல் யுகத்தினுள் சிக்குண்டுள்ள சமூகத்தில் குறுகிச் செல்லும் வாசிப்புத்திறனையும் வாசகனையும் நன்கறிந்து ஒவ்வொரு கட்டுரைகளையும் ஒன்று தொடக்கம் மூன்று பக்கங்களுக்குள் கருத்துச் செறிவோடும் சுவையோடும் அமைத்திருப்பது பாராட்டிற்குரியது.

நேர்வய சிந்தனை முதல் தலைமைத்துவம் ஈறாக அனைத்துத் தலைப்புகளும் இன்புறு மனிதவாழ்வை சுயவிழிப்புடன் நேரிய பாதைக்கு இட்டுச் செல்ல இன்றியமையாத விடயங்கள். மனிதன் ஒரு சமூகப்பிராணி என்ற வகையில் அவனால் தனித்தியங்க முடியாது. எனவே பிறருடன் கூடியே வாழ்ந்தாகவேண்டும். இதற்கமைவாக நேர்வயமான சிந்தனை, நல்ல விடயங்களில் கவனம் செலுத்துதல், நேர்வயமாக எமக்குள்ளேயே பேசிக்கொள்வது, நேர்வயமான குறிப்புகளுடன் நாள்களை ஆரம்பித்தல், உங்களுடைய நடத்தைக்கு நீங்களே பொறுப்பாக இருத்தல், நேர்வய சிந்தனைகளுக்கு தீனிபோடுபவற்றை அடிக்கடி வாசித்தல், மறையான சிந்தனைகளை இனங்கண்டு தவிர்த்தல், இலக்கை நோக்கிய பயணம்,



கந்தர்மடம் அ.அஜந்தன்

...வையும் வளர்த்தல், மனநிறைவையும் சாதுரியமாக எதிர்கொள்ளல், வாழ்க்கைத்திறன் மேம்பாடு, நன்மைகளை அனுபவித்தல் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தேடுதல், சவால்களைச் சாதுரியமாக எதிர்கொள்ளல், வாழ்க்கைத்திறன் மேம்பாடு, நன்மைகளை அனுபவித்தல் மற்றும் ஆளுமை போன்ற தலைப்புகள் தனிமனித வாழ்வில் சுயவிழிப்புணர்வு மற்றும் சுயவிருத்தி சார்ந்த கட்டுரைகளாக அமைந்துள்ளன.

**சிறப்புறு குணங்களை வளர்த்து**
**சீர்மிய நெறிதனில் நடக்க**
**அறமது ஆளுமை ஆகும்**
**அனைத்துமே உன்வசம் ஏகும்....**

போன்ற தன் கவி வரிகளால் தன்னிறைவு ஏகும் தலைப்புகளுக்கு விளக்கமளித்துள்ளார்

**மற்றவர் மனங்களைப் புரிந்திடவே**
**மலர்ந்திடும் உறவுகள் அருகருகே**
**உற்றவர் அயலவர் ஆதகையில்**
**உளமது நிறைந்து களித்திடுமே**

என்று உள்ளத்துள் உறையும் உறவுகளின் பங்களிப்பும் அதனூடான உள ஆரோக்கியத்தையும் இயம்பும் கவிதைகளும் வாசகர் மத்தியில் பல்சுவை உணர்வைத் தூண்டும் என்றே எண்ணத் தோன்றுகின்றது. 'மன அழுத்த முகாமை செய்யப் பழகிக்கொள்ளுதல்', 'நல்ல விடயங்களில் கவனம் செலுத்துதல்', 'சிறந்த ஆளிடைத் தொடர்பாடலை மேற்கொள்ளல்' 'நேர்வயமாக எமக்குள்ளேயே பேசிக் கொள்ளும் வழக்கத்தை ஏற்படுத்துதல்', 'பிரச்சினைகளுக்கான தீர்வைத் தேடுதல்', 'நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தல்', 'வாழ்க்கைத்திறன் மேம்பாடு' உள்ளிட்ட கட்டுரைகள் எமது சராசரி வாழ்வில் புரட்டிப் பார்க்கப்படாத அல்லது அரிதாகப் பேசப்படும் விடயங்களையும் அதுசார் சாராம்சங்களையும் கொண்டமைந்திருக்கின்றன. பயனுள்ள பல ஆழமான கருத்துகளை இலகு தமிழிலும் குறைந்த பக்கங்களிலும் வடிவமைத்து பொருத்தமான காலத்தில் வெளியிட்ட நூலாசிரியரையும் அவரது இந்தப் படைப்பையும் எத்தனை பாராட்டினாலும் தகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(சங்க காலத்தில் வணிக நடைமுறைகள் எவ்வாறிருந்தன. அக்காலத்தில் தமிழர்கள் எவ்வாறான வணிகக் கலாசாரத்தைப் பின்பற்றினார்கள் என்பன தொடர்பில் இந்தக் கட்டுரை விரிவாக ஆராய்ந்து எண்பிக்கின்றது. கடந்த வாரத்தின் தொடர்ச்சி இவ்வாரம் பதிவாகின்றது)

# சங்க இலக்கியங்களில் வணிகமும் வணிக நடைமுறைகளும்



■ பேராசிரியர்
சிவேசன் சிவானந்த மூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சங்ககாலத்தில் உள்நாட்டு மற்றும் கடல் வழி வியாபாரங்களின் ஊடாகதான் அரசு செழுமை பெற்றது என்றால் மிகையல்ல. உள்நாட்டு வியாபாரத்தில் பல்வேறு பொருள்கள் விற்பனை செய்யப்பட்டதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பட்டினப்பாலை என்னும் நூலில்.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்,
காலின் வந்த கருங்கறி மூடையும்,
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,
தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்,
கங்கை வாரியும், காவிரிப் பயனும்,
ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி,
வளம்தலை மயங்கிய நளந்தலை மறுகின்,
(பட்: 185 195)

காவேரிப் பூம்பட்டினத்தில் உள்ள தெருக்களில் நிமிர்ந்து கம்பீரமாகக் காட்சியளிக்கின்ற குதிரைகளும், வண்டிகளில் வந்த மிளகு மூட்டைகளும், பொன், முத்து, சந்தனம், அகில், பவளம் மற்றும் கங்கை, காவேரி நதிக்கரையில் விளைவிக்கப்பட்ட பொருள்களும், ஈழத்திலிருந்து கொண்டு வரப்பட்ட உணவுப் பண்டங்களும், மியன்மாரிலிருந்து கொண்டுவரப்பட்ட அரிய வகையான பொருள்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. மேலும் சங்க காலத்தில் நடைபெற்ற உள்நாட்டு வணிகத்தில் உப்பு வணிகம் முதன்மை பெற்றிருந்தது என்பதற்கு இலக்கியங்களிலிருந்து பல சான்றுகள் பகிரலாம். எடுத்துக்காட்டாக பெரும்பானாற்றுப்படையில் (46 - 65) வரிகளில் உப்பு வணிகர்கள் செல்லும் வழியையும், வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் பயன்படுத்துகின்ற வண்டிகளைப் பற்றியும் பல பாடல் வரிகள் உள்ளன. தொண்டை நாட்டின் தலைநகராம் காஞ்சிக்குச் செல்லும் பெருவழியில் நிரல், நிரல்களாக உமணர்கள் உப்பை ஏற்றிய வண்டியுடன் செல்வார்கள். அவர்கள் எடுத்துச் சொல்லும் உப்பை மருத நிலத்து உழவர்களுக்கும், முல்லை நிலத்து ஆயர்களுக்கும் குறிஞ்சி நிலத்து குறவர்களுக்கும், பாலை நிலத்து மறவர்களுக்கும் விற்பனை செய்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய பணத்தைத் திரட்டிக் கொள்வர்கள்.

மேலும் தமிழர் தம் பண்பாட்டில், 'பூ' முக்கியமான வகிபங்கைக் கொண்டுள்ளது. இந்தவகையில் பூவையரே பூவில் அதிக நாட்டம் கொண்டிருப்பார்கள். இதனாலன்றோ பண்டைத்தமிழன் வணிகத்தில் உயர்நிலையில் 'பூ' வியாபாரம் இடம்பெற்றிருந்தது.

## கடல் வாணிபம்

பண்டைத் தமிழ் இலக்கியங்களின் வாயிலாகத் தமிழர்கள் கிரேக்க, உரோம, எகிப்து, சீனம், யவனம், காழகம், கடாரம் போன்ற நாடுகளுடன் கடல் வணிகத்தில் ஈடுபட்டனர் என்பது உறுதிப்படுத்தியுள்ளன. சங்ககாலத்தில் ஆட்சியாளர்கள் கப்பல் வணிகத்தில் அதிதீவிரமான அக்கறையைக்கொண்டிருந்தனர். வெளிநாடுகளிலிருந்து பொருள்களை ஏற்றிவந்து வணிகம் செய்வதற்குப் பயன்படுத்திய மரக்கலங்களை நாவாய், வங்கம் என அழைத்தனர். இவ்வாறான நாவாய், வங்கம் பயன்படுத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டமைக்கு சங்க நூல்கள் முதல் சங்கமருவிய காலத்து இலக்கிய நூல்கள் வரை சான்று பகிர்கின்றன. இதனைச் சங்க இலக்கியங்களிலிருந்து சிலவற்றை எடுத்துக்காட்டலாம்.

கடல் வாணிபத்தை மேற்கொள்வதற்கு நாவாய்கள் பயன்படுத்தப்பட்டமை பற்றி கட்டியலூர் உருத்திரங் கண்ணானார் என்ற புலவரினால் பாடப்பட்ட பட்டினப்பாலையில் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

தொல்வானை நல்லாசிரியர்
உறழ்குறித்து எடுத்த உருகெழு கொடியும்,
வெளில் இளக்கும் களிறுபோல,
தீம்புகார்த் திரைமுன் துறைத்,
தூங்குநாவாய் துவன்றுஇருக்கை
(பட்: 170 - 174)

எனக் குறிப்பிடப்படுகின்றது.

தொன்மை இலக்கியங்களில் காணப்படுகின்ற இலக்கியச் சான்றுகளின் துணையுடன் தமிழினம் கப்பல் வாணிபத்தை நீண்ட காலமாக மேற்கொண்டிருந்தது என்பது புலப்படுகின்றது. இந்தகைய கடல் வாணிபத்தில் சேரநாடு சிறந்து விளங்கியதற்கு அந்நாட்டின் இயற்கைவளமும் பிரதான காரணியாக அமைந்திருந்தது.

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என அழைக்கப்பட்ட நெடுஞ்சேரலாதன் கடல் வாணிபத்தில் சிறந்து விளங்க பல்வேறு தந்திரோபாயங்களை மேற்கொண்டான். சேர மன்னர்களின் காலத்தில் முசிறிதுறைமுகம் முதன்மையானதாகக் காணப்பட்டது. முசிறி துறைமுகத்தில் நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தையும், முசிறியின் சிறப்பையும் புறநானூறில் பரணர் என்கின்ற புலவர் பின்வருமாறு அழகுற சித்திரிக்கின்றார்:

மீன்நொடுத்து செல்நுவைகி,
மிசை அம்பின் மனை மறுக்குந்து:
மனைக் குவைஇய கறி மூடையால்,
கலிச் சும்பைய கரைகலக் குறுந்து,
கலம் தந்த பொற் பரிசம்
கழித்தோணியாள், கரைசேர்க்குந்து
மலைத் தாரமும் கடல்தாரமும்
தலைப்பெய்து, வருநகர்க்குந்து ஈயும்
புனல்அம் கன்னின் பொலந்தார்க் குட்டுவன்
(புறம்: 343 - 110)

பொன், இரத்தினம், புடவைகள், அழகிய ஓவியங்கள் நிறைந்த ஆடைகள், பவளம், செம்பு, ஈயம், கோதுமை போன்றவை இத்துறைமுகத்தில் இறக்கப்பட்டன. மிளகு, முத்து, யானைத்தந்தங்கள், பட்டு, இரத்தினம் போன்றவை இங்கிருந்து பலஸ்தீனம், உரோம், சீனம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இருந்த போதும் முத்து முதன்மையான ஏற்றுமதிப் பொருளாக விளங்கியது. மேலும் மதுரைக்காஞ்சி என்னும் இலக்கியத்தில் முத்தும் சங்கும் கடலில் தேடிக் கண்டுபிடிப்பதற்கு என ஒரு சமூகம் அக்காலத்தில் கொற்றை துறைமுகத்துக்கு அருகாமையில் அதாவது சேரியில் வாழ்ந்ததாகவும் அவர்கள் மேலும் மன்னன் நெடுஞ்செழியனின் நட்பு வட்டத்தில் வாழ்ந்திட அவாவுற்றிருந்தனர் எனவும் செய்யுள் வழி கூறப்பட்டுள்ளது.

விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை இருஞ்சேரிக்
கள்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொள்கையோர் நசைப்பொருந!
(மதுரை: 135 - 138)

குற்றவாளிகள் எனச் சிறையில் அடைக்கப்பட்ட சிறைக்கைதிகள் முத்து குளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டனர். பண்டைய உரோம, கிரேக்க நாடுகளில் வாழ்ந்த வசதி படைத்தவர்கள் முத்துக்களையும், பவளத்தையும் பயன்படுத்தி தமது ஆடைகளை அலங்கரிப்பதற்கு அவற்றைத் தமிழ் வணிகர்களிடமிருந்து கொள்வனவு செய்தனர். 'தமிழர்சால்பு' என்னும் நூலில் பவளம் சோழ மண்டலக்கரையில் விளைந்தது எனவும் இருப்பினும் முத்திலிருந்து கிடைத்த வருமானம் அளவுக்கு பவளத்தின் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டிய மன்னன் அறம் வழி நின்று முத்து வாணிபத்தில் ஈடுபட்டான் என அகநானூற்றில் மதுரைக்கணக்காயனார் என்பவரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக்கண நூல் இயற்றப்படுவதற்கு முன்னே தமிழர்கள் கடல் கடந்து வாணிபத்தில் ஈடுபட்டனர். கடல் வணிகமும் தமிழர் வாழ்வியலில் ஓர் அங்கமாக நோக்கப்படுகின்றது. இன்று கடல்வழி வணிகத்தின் வழியாக எண்ணிறைந்த செல்வத்தை வளர்முக நாடுகள் பெற்றுக் கொள்கின்ற யுத்தியை அன்றே தமிழ் அரசர்கள் கையாண்டு பெருளீட்டியிருந்தனர் என்பது இங்கு சிந்தித்தற்குரியது.

(தொடரும்..)

# தியானமும் ஒழுக்கமும்



முருகையா தவக்குமார்,
ஊடகக் கற்கைகள் துறை
இரண்டாம் வருடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மனித மனமே அனைத்துக்கும் ஆதாரம். ஆக்கத்தையும் அழிவையும் தீர்மானிக்கும் அளப்பெரும் சக்தி மனித மனதுக்கிருக்கின்றது. மனித மனதை ஆட்கொள்ளும் 13 தோஷங்கள் பற்றிச் சான்றோர் குறிப்பிடுகின்றனர். இவை ராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம், இரட்சியம், அசூயை, இடம்பம், கற்பம், ஆங்காரம் என்றவாறாக அமைகின்றன. இந்தப் 13 தோஷங்களும்தான் மனதின் இயல்பான அமைதியைச் சீரழித்து ஒருவர் தனக்கும் பிறருக்கும் அழிவுப்பாதையைத் தேர்ந்தெடுத்துப் பயணப்படக் காரணமாக அமைகின்றன. ஒன்று, ராகம். இது ஒருவனுடைய மனைவி மேல் ஆசைப்பட்டு அவளை எப்படியாவது அடையவேண்டும் என்று எழுகின்ற மனத்தின் வெறித் தூண்டுதல் ஆகும். இரண்டு, துவேஷம். இது சதா சர்வமும் ஒருவர் மீது வெறுப்புக் காட்டுதல் ஆகும். மனம் இப்படித் துவேஷத்தைத் தூண்டும் பொழுது பல கொடிய செயல்களில் மனிதன் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். மூன்று, காமம். இது கரை கடந்த ஆசை என்று பொருள்படும். நான்கு, குரோதம். இது நம் உரிமையை எவராவது அபகரிக்க நினைக்கும்போதும் எழுகின்ற கடும் சினமாகும். ஐந்து, லோபம். இது தன்னிடம் உள்ள எந்த ஒரு பொருளையும் இன்னொருவருக்கு கொடுத்து உதவுவதற்கு விரும்பாத மனக்குற்றமாகும். ஆறு, மோகம். இது அளவு கடந்த ஆசா பாசத்தைக் குறிப்பதாகும். ஏழு, மதம். இது செருக்கு எனப்படும் கர்வமாகும். எட்டு, மார்ச்சரியம். இது பிறருடைய சிறப்பைக் கண்டோ, கேட்டோ பொறாமைப்பட்டு அவருக்கு கேட்டை நினைக்கும் மனக்குற்றம் ஆகும். ஒன்பது, லட்சியம். இது தனக்குத் துன்பம் நேரும்போது இதேபோல பிறரும் துன்புறவேண்டும் என்று நினைக்கும் ஒருவித மனோநிலை. பத்து, அசூயை. இதுதான் அனுபவிக்கும் ஒன்றை வேறு எவரும் அனுபவிக்கலாகாது என்று நினைக்கும் ஒருவிதமான எண்ணமாகும். பதினொன்று, இடம்பம். இது பகட்டு மனப்போக்கு. அதாவது தன்னுடையதே எப்போதும் சிறந்தன என்று காட்டிக் கொள்ள விரும்பும் மனப்போக்கு. பன்னிரண்டு, தர்ப்பம். இதுதானே பெரிய வீரன் என்று எண்ணி மனத்தில் வலுப்பெறுகின்ற ஒருவகையான எண்ணம் இதனால் பிற வீரர்களை மதிக்காமல் போகின்ற நிலை ஏற்படுகின்றது முடிவில் அழிவுக்குக் காரணமாகிறது. பதின்மூன்று, ஆங்காரம். இது தானே வல்லவன் பிறரெல்லாம் தாழ்ந்தவர் எனக் கருதும் ஒருவிதமான போக்க ஆகும். இதனால் அழிந்தவர்கள் பலர். இது மனச் சாந்தியையே அழித்துவிடும். பகையையும் எதிர்ப்பையும் மிகுதியாக வளர்த்து விடும்.


இந்தப் பேரபத்தங்கள் சம்பவிக்காமல் இருக்கவேண்டுமாயின் தியானம் என்பது மிக மிக அவசியமானதாகும். தியானத்துக்கு மனதை ஒருமைப்படுத்துதல் மிகமிக அவசியமாகும். வெளியே போய் வரும்போது வழியிலே எத்தனையோ ஆண் - பெண்களைச் சந்திக்கின்றோம் இவர்கள் எல்லோரும் எம் நினைவில் பதிவது இல்லையே நம் மனம் விரும்பும் ஒருவர் அல்லது சிலர் மட்டுமே நினைவில் நிற்கின்றனர். இது ஏன்? கண் எல்லாரையும் பார்க்கின்றது. ஏன் எல்லோரும் நினைவில் இருப்பதில்லை? கண் பார்த்தவைகளை எல்லாம் மனதுக்குத் தெரிவித்தாலும் மனம் தனக்கு ஈடுபாடு உள்ளதை மட்டுமே பதிவுசெய்து கொள்கின்றது, பிறவற்றை ஒதுக்கி விடுகின்றது. எனவே மனம் ஈடுபாடு கொண்டு ஒன்றில் முழுமையாக ஒன்றும்போது தான் அது மனதில் பதிகின்றது. இந்த விளக்கம் தியானத்துக்கும் பொருந்தும். மனத்தை ஒருமுகப்படுத்தி கவனிப்பதற்குச் சில பயிற்சிகளை மேற்கொள்வது முக்கியமானது. எவ்வளவுக்கெவ்வளவு தியானத்தில் ஒன்றிக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு எமது மனம் சாந்தப்படும். வாழ்வு வளமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபக்தியே வாழ்வின் உயர்நிலை!

'கலாவிபூஷணம்'
இரா.நிஷாந்தன்
ஆசிரியர்

எம் வாழ்வில் மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் நால்வர் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். அவர்களில் குரு முதன்மையானவர். அறியாமை எனும் இருளை அகற்றி வாழ்வில் ஞானம் நல்லொளியைப் புகட்டி எம்மை வழிப்படுத்துபவரே குரு. குரு ஆசிரியர் எனவும் அழைக்கப்படுகின்றார். குரு என்பவர் வேதங்களைக் கற்று, சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றவராக, ஒழுக்கநெறிகளைப் பின்பற்றி வாழ்பவராக விளங்குகின்றார். குரு ஒருவரின் துணையின்றி யாருமே தம் வாழ்வில் உயர்வடையமுடியாது என்பது உண்மையாகும். குருவின் மேன்மையை பின்வரும் சுலோகத்தில் கண்ணுறுவோம்.



குரு பிரம்மா குரு விஷ்ணு
குரு தேவோ மகேஸ்வர
குரு சாட்ஷாத் பரப்பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ

பிரம்மா, சிவன், விஷ்ணு எனும் மூம்மூர்த்திகளே உலகத்துக்கு அறிவைப் புகட்டும் ஞானக்குருக்களாக விளங்குகின்றனர். அவர்களை முதலில் நாம் வணங்க வேண்டும்.

## குருகுலக்கல்வி

முன்னைய காலத்தில் குருகுலக்கல்வி முறையே காணப்பட்டது. கல்வி கற்க வேண்டும் எனும் விருப்பத்துடன் குரு ஒருவரை நாடி வரும் சீடர்களை குருவானவர் தம் மாணவர்களாக ஏற்றுக்கொண்டு அவர்களை தம் ஆச்சிரமத்தில் தங்க வைத்து அவர்களுக்கு கல்வி மற்றும் சகல கலைகளையும், ஒழுக்கநெறிகளையும் வாய் மொழி வாயிலாகக் கற்றுக் கொடுப்பார். அவற்றை மாணவர்களும் மனப்பாடம் செய்து குருவிடம் ஒப்புவிக்கவேண்டும். குருகுலக்கல்வி முடிவடையும் வரைக்கும் குருவோடு தங்கியிருக்கும் சீடன் ஒருவன் குருவுக்குப் பணிந்து அவருக்குப் பணிவிடைகளை ஆற்றி குருவின் மனவிருப்பத்துக்கு உரியவனாக மாறுகின்றான். தனது சீடன் கல்வி ஞானங்களில் முழுமையடைந்துவிட்டான் என்பதை அறியும் குரு அவனைத் தனது ஆச்சிரமத்தில் இருந்து விடுவிப்பார்.

## குருதட்சணை


குருகுலத்தில் குருவிடம் முழுமையான கல்வியைப் பெறும் சீடர்கள் குருகுலத்தை விட்டு வெளியேறும் முன்னர் குருவுக்கு குரு தட்சணை வழங்கியே செல்லமுடியும். அவ்வாறு குரு வேண்டிய குரு தட்சணைகளை அளித்து சிறப்புப் பெற்றுள்ள சீடர்களின் தன்மைகள் சிலவற்றை நோக்குவோம். பகவான் கிருஷ்ணர் தம் குருவாகிய சாந்தீபனி முனிவர் வேண்டியபடி இறந்து போன குருவினது புதல்வனை உயிருடன் மீட்டு வந்து கொடுக்கின்றார். ஏகலைவன் எனும் வில்லாளன் தன் குருவாகிய துரோணர் குருதட்சணையாக வேண்டியவாறு தன் கைப் பெருவிரலை வெட்டிக் கொடுக்கின்றான். துரோணாச்சாரியார் பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களிடம் பாஞ்சால நாட்டு மன்னன் துருபதனை போரில் வென்று அவனைத்தேரில் கட்டி இழுத்து வந்து தன் முன்பாக நிறுத்த வேண்டும் எனும் குருதட்சணையை வேண்டுகின்றார். பாண்டவர்கள் தம் குரு வேண்டிய குருதட்சணையை அளித்து குருவின் விருப்பத்தை நிறைவேற்றுகின்றனர்.

## குருவின் மேன்மை

கடவுளர்களும், கடவுள் அவதார புருஷர்களும் குருவின் துணை கொண்டு ஞானம் மற்றும் வித்தைகளைக் கற்றுள்ளனர். ஆயகலைகளுக்கு அதிபதியாக விளங்கும் கல்விக் கடவுளாகிய சரஸ்வதிதேவிக்கே ஒரு குரு இருக்கின்றார் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவரே ஹயக்ரீவர். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் சாந்தீபனி முனிவரை குருவாகக் கொண்டு கல்வி கற்றுள்ளார். சவுனகாதி முனிவர்கள் நால்வருக்கு இறைவன் தட்சணாமூர்த்தியாக இருந்து கல்வி போதித்துள்ளார். ஸ்ரீ இராமருக்குக் குருவாக இருந்தவர் வஷிட்ட முனிவர். பஞ்சபாண்டவர் மற்றும் கௌரவர்களுக்கு குருவாக விளங்கியர் துரோணர். பிதாமகர் பீஷ்மர் மற்றும் கர்ணன் ஆகியோருக்கு குருவாக இருந்தவர் பரசுராமர்.

## இறைவனுக்கு நிகரானவர்

குரு என்பவர் இறைவனுக்கு நிகரானவர். எழுத்தைக் கூறச்செய்து அதை எழுதுவித்தவன் நாம் கண்ணால் காணும் குருவே. குரு என்பவரே எம்மை குறையின்றி வாழ வழி செய்பவர். குருவானவர் எப்போதும் சமநிலை பேணுபவர். குருவே எமக்குத் துணையாக அருகில் இருந்து எம் தவறுகளைத் திருத்தி எம்மை தர்ம நெறியில் ஆற்றுப்படுத்துகின்றார். வித்தையைக் கற்றுத் தரும் குருவின் பார்வையால் எமது பாவங்கள் யாவும் அகன்றுவிடும். குருவின் வழிகாட்டலால் தடைகள் யாவும் தகர்ந்து போய்விடும். குருவின் ஆசியினால் காரியங்கள் யாவிலும் வெற்றியே நிறைந்திடும். ஆனால் ஒருவன் தனக்கு கல்வி கற்றுத் தந்த குருவை மறந்து போயின் அவனது வாழ்க்கை அதன் பின் நரக வாழ்க்கையாகும். அவனுக்கு முக்தி என்பதும் இல்லாமல் போய்விடும். குருவிற்கு பொய் உரைப்பது மாபெரும் பாவமாம். ஆகவே மாணவப் பருவத்தில் இருந்தே குரு பக்தியைப் பேணி குருவின் நல்லாசியினால் வாழ்வில் சிறப்புற்று வாழ நாம் முயற்சிக்க வேண்டும்.





ஐ.கிருஷ்ணன்

# ஊரிப்பிட்டி மயானம் ஓர் முன்னுதாரணம்!

முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு மட்டுவில் வடக்கு ஊரிப்பிட்டி இந்துமயானத்தின் புனரமைப்புப் பணிகள் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமாகவே காணப்படுகின்றன. நீண்டகாலமாக பற்றைக்காடாகக்காணப்பட்ட மயான வளாகம் இன்று சீரும் சிறப்புமாகச் சீரமைக்கப்பட்டிருக்கின்றது.

பிரசித்திபெற்ற பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவில் சுற்றாடலில் உள்ள மட்டுவில் வடக்கு மற்றும் சந்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்த சைவமக்களால் நீண்டகாலமாக இந்த மயானம் பயன்படுத்தப்பட்டு வந்தது. எனினும் கைவிடப்பட்ட பூமியாகவே அது காட்சி தந்தது. மயானத்தின் உள்ளே செல்லும் ஒற்றையடிப்பாதை கூட பற்றைகள் நிறைந்தே காணப்பட்டன. எரிகொட்டகை, கிணறு என்பனகூட சேதமடைந்தே இருந்தன. இவ்வாறிருக்கையில், கடந்த ஜுன் மாதம் அந்தப் பகுதியில் இடம்பெற்ற மரணச்சடங்குக்காக மயானத்துக்குச் சென்ற ஒரு சிலரின் எண்ணத்தில் உருவான சிந்தனையின் பயனாக மயானசபை உருவாக்கப்பட்டது.

அங்குரார்ப்பணக் கூட்டம் கண்ணகை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டு மயான அபிவிருத்திக்கு தம்மாலான பங்களிப்பை வழங்க முன்வந்தனர். கூட்டத்துக்கு ஏற்பாடுசெய்த அந்தப் பகுதியைச் சேர்ந்த காசிநாதர் சிவஞானசுந்தரம் தலைமையிலான ஊரிப்பிட்டி இந்து மயான அபிவிருத்திச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்தச் சபைக்கு உள்ளூரிலிருந்தும் அப்பகுதியைச் சேர்ந்த புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களும் தம்மாலான நிதிப் பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து முதல்கட்டமான சீரமைப்புப் பணிகளில் ஊர் மக்களின் பங்களிப்புடன், மயானத்தைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டது.

சபைக்குக் கிடைத்த நிதியில் சேதமடைந்து காணப்பட்ட எரிகொட்டகையும் மண்டபமும் கிணறும் புனரமைக்கப்பட்டதுடன் மயான வளாகம் கனரக வாகனத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. தற்போது பற்றையாக காணப்பட்ட மயான வளாகத்தைப் பசும்சோலையாக மாற்றுவதற்காக மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. தென்மராட்சி பல்வேறுபட்ட இந்து மயானங்கள் காணப்படுகின்றன.

மட்டுவில் வடக்கு ஊரிப்பிட்டி மயான அபிவிருத்திச் சபையினர் போல ஏனைய மயான எல்லைக்குட்பட்ட மக்கள் தமது பகுதியில் உள்ள மயானங்களுக்கு அபிவிருத்திச்சபையை உருவாக்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பட்சத்தில் அந்தந்த மயானங்களும் விரைவில் சீரமைப்புப் பெறும். ஒவ்வொரு பகுதியிலும் காணப்படும் கோவில்கள் அண்மைக்காலமாக பல்வேறு வளர்ச்சிகளுடன் காணப்படுவதுபோல, மனிதனின் இறுதிநிலைக் கோவிலான மயானங்களும் வளர்ச்சி பெறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி அமிர்தாம்பிகை பாடசாலைக்கு
அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
விலை பேசி தீர்மானிக்கலாம்.

**077 034 4315**

## பெயர் மாற்றம்

8/3, மத்திய கிழக்கு வீதி, குருநகரில்
வசிக்கும் **பெனடிக்ற் தேவதாஸ்**
ஆகிய நான் எனது பெயரை
**பெனடிக்ற் வின்சன் தேவதாஸ்** என
மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல
ஆவணங்களிலும் **பெனடிக்ற் வின்சன்
தேவதாஸ்** என்றே கையொப்பம் இடுவேன்
என இலங்கை சோஷலிச குடியரசு
மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**பெனடிக்ற் வின்சன் தேவதாஸ்**

(cs 52367) (N.1)

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்
## ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சிமன்றத்திற்குட்பட்ட வட்டாரம் 11. சப்பச்சிமாவடி பிள்ளையார் கோயில் வீதி. 101 (101 பழையது) எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சரவணை கந்தையா. உரிமைகோருபவர் :- தாமோதரம்பிள்ளை பெண் மீனாச்சி என்னும் பெயரில் ஆதனவரிப்பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை பெரியமாவடி சாவகச்சேரியை சேர்ந்த குணசேகரம் கைம்பெண் சுமதி. குணசேகரம் நிசாந்தன். குணசேகரம் மகள் சரண்யா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை அவர்கள் மூலம் 2016 இலக்க 19.04.2010ம் திகதியில் நிறைவேற்றிய நன்கொடை வெளிப்படுத்தல் உறுதிமூலம். முதலாம் தரப்பினரின் மகளும் மற்றையோரின் சகோதரியுமாகிய குணசேகரம் சுகன்ஜா பெற்றுள்ளார்.

மேலும் இவ் உறுதியில். வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சி பகுதி சாவகச்சேரி கோவில்பற்று. சாவகச்சேரி இறை "கயட்டையடி வளவு" நிலப்பரப்பு 2. எல்லைகள் கிழக்கு பாலசுந்தரம் மனைவி ஜெயமலருக்குரிய ஆதனம். வடக்கு குணசேகரம் மனைவி சுமதிக்குரிய ஆதனம். மேற்கு கந்தையா இரத்தினத்துக்குரிய ஆதனம். தெற்கு றோட்டு. இவ் ஆதனமானது முதலாம் தரப்பினரின் முதலாமவரின் கணவரும் மற்றையோரின் பிதாவுமாகிய குணசேகரம் வழிவந்த முதுசமும் நெடுங்கால தடையற்ற ஆட்சியுமானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர் கல்வயல். சாவகச்சேரியை சேர்ந்த குணசேகரம் சுகன்யா என்பவரால் தவசிக்குளம் மிருசுவிலை சேர்ந்த தாமோதரம்பிள்ளை பேரின்பசிவம் பெண் விஜிதா விற்கு பிரசித்த நொத்தாரிசு திஷாந்தினி வேணுகஜன் அவர்கள் மூலம் 27.11.2016 ம் திகதியில் நிறைவேற்றிய 02ம் இலக்க அறுதி உறுதி முலம் இவ்வாதனம் சென்றடைந்துள்ளது.

பின்னர் தவசிக்குளம் மிருசுவிலை சேர்ந்த தாமோதரம்பிள்ளை பேரின்பசிவம் பெண் விஜிதா என்பவரால் வல்வெட்டி. வல்வெட்டிதுறையை சேர்ந்த சிவசுப்பிரமணியம் ஜெகதாஸ் இற்கு பிரசித்த நொத்தாரிசு திஷாந்தினி வேணுகஜன் அவர்கள் மூலம் 20.05.2020ம் திகதியில் நிறைவேற்றிய 609ம் இலக்க அறுதி உறுதி முலம் இவ்வாதனம் சென்றடைந்துள்ளது.

இவ்வாதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சிவராசா அவர்களால் 23.11.2016 திகதி அளந்து வரையப்பட்ட 5355ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 01 குளி 15.02 என காட்டப்பட்டுள்ளது.

தற்போது சிவசுப்பிரமணியம் ஜெகதாஸ் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காதபட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப்பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்.**
நகராட்சி மன்றம்.
சாவகச்சேரி.

03.10.2023

## முதலாம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம்
07 • 09 • 1964

மறைவு
15 • 10 • 2022

## அமரர் செந்தில்வேல் இரவீந்திரன்
(ஓய்வுபெற்ற இ.போ.ச. ஊழியர்)

**04.10.2023**

**திதி: ஷஷ்டி**


அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அப்பா!
உங்கள் பாசமான முகம் பார்த்து ஓராண்டு ஆனதே
உங்கள் முகம் காண இன்றுவரை பரிதவித்து நிற்கின்றோம்
எங்கள் நிழல் எங்கள் கூடவே வருவது போல
உங்கள் புன்னகை பூத்த முகம் எங்கள் நினைவில்
என்றுமே மறையாது
எங்கள் இதயங்களில் நாம் வாழும் காலம் வரை
எங்களுடன் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**இல.18/6, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.**

**பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்**

(cs 26423) (N.1)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
21 • 03 • 1943

இறைவனடியில்
16 • 10 • 2022

## அமரர் சுப்பிரமணியம் பொன்னம்பலம்

**திதி: தேய்பிறை ஷஷ்டி**

அவனிவிட்டு நீங்கள் நீங்கி
ஆண்டு ஒன்று ஆனதப்பா!
அனுதினமும் உங்கள் நினைவில்
ஆறாத்துயரடைகின்றோம் - அப்பாவே!
பாசத்தை பொழிந்தீர்கள் - எமக்கு
பக்குவமாய் பல அறிவுரைகள் சொன்னீர்கள் !
பார் புகழ எமை பாராட்டி சீராட்டி
வாழவைத்த தெய்வம் நீங்கள் அப்பா!
எம் உயிர் உள்ளவரை நின் நினைவோடு
எங்கள் வாழ்வு தொடரும் அப்பா!
உங்கள் ஆத்மா இறையடியில்
நித்திய சுகம் பெற
நித்தம் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**குமரகோட்டம்
கோண்டாவில்.**

**என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்



மண்ணில்
17 • 08 • 1942

விண்ணில்
30 • 09 • 2023

### திருமதி இரத்தினபூபதி சோமஸ்கந்தன் (மங்கம்மா)

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் வத்தளையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினபூபதி சோமஸ்கந்தன் கடந்த (30.09.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் வள்ளியம்மை (நவாலி) தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் சோமஸ்கந்தன் அவர்களின் அன்பு மனைவியும், லிங்கன், யசோதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கௌசல்யா, மதிவாணன் ஆகியோரின் மாமியாரும், பிருந்தா, சுகந்தா, அஜந்தா, கனிஸ்கரன், சமிஷ்சா ஆகியோரின் பாட்டியும், காலஞ்சென்றவர்களான துவாரகாம்பாள், உமாமகேஸ்வரன் (அமுது) மற்றும் புஸ்பராணி, சத்தியசீலன் (குட்டி), ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் பொரளை கனத்தை மயாத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:
குடும்பத்தினர்
076 887 7978**

(cr.40704) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்நீதிமன்றம் முன் போராடுவதற்கு முடிவு!

கொழும்பு, ஒக். 4

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு வழங்கப்பட்ட அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நீதிபதிக்கு நீதிகோரும் வகையிலும் கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு முன்பாக எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை சட்டத்தரணிகள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு, இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, வடக்கு-கிழக்கு சட்டத்தரணிகள் சங்கங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகள் இலங்கையின் அனைத்து சட்டத்தரணிகளையும் அழைத்து உயர்நீதிமன்ற முன்றிலில் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். (அ-ம-100)


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தில் ஐந்து படுக்கை அறைகள், 1 குளியலறை, சாமி அறை, 2 அவுட் கோல், கார் பாக்கிங், தரமான தண்ணீர் வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

* மாத வாடகை - 30 000/- * முற்பணம் - 2 லட்சம்

தரகர் தேவையில்லை

076 717 0134 (Whatsapp)
077 123 4745

## வாடகைக்கு உண்டு

பழைய நம்பர் 179, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 3 ஸ்ரோர்ஸ் (40 X 12), 2 கடை (30 X 15)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான அறைகள் (ஆண்கள்) அபிகொலிடே விழாக்கு முன்பாக வாடகைக்கு உண்டு. (CCTV கமரா உண்டு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

077 863 1768

(cs.52369) (N.I)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 21 . 09 . 1934



மறைவு 04 . 09 . 2023

கடந்த 04.09.2023 அன்று கர்த்தருள் நித்திரையடைந்த எமது சிறிய தாயார்

### அமரர் திருமதி P.M. அழகரத்தினம்

(முன்னாள் அசிரியை - வேலணை மத்திய கல்லூரி - யா / புனித யோண் பொஸ்கோஸ் வித்தியாலயம்)

அவர்களின் இறுதி நிகழ்வில் நேரில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்திய நண்பர்கள், உறவினர்கள், யா / சென் யோண் பொஸ்கோஸ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பரியோவான் ஆலய அருட்தந்தை மற்றும் உறுப்பினர்கள் இரங்கள் உரை நிகழ்த்திய வேலணை மத்திய கல்லூரி முன்னாள் அதிபர்கள், அருட்தந்தையர்கள் மற்றும் தொலைபேசி, சமூக ஊடகங்கள் ஊடாக அனுதாபம் தெரிவித்த, மலர்வளையங்கள் அனுப்பிய மற்றும் இரங்கல் உரைகள் வெளியிட்ட வேலணை மத்திய கல்லூரி முன்னாள் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சென் யோண் பொஸ்கோஸ் வித்தியாலய முன்னாள் அசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (04.10.2023) புதன்கிழமை, 40/2, கோவில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

40/2, கோவில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். — குடும்பத்தினர்

(cs.52364) (N.I)

# புலமைப்பரிசில் மாணவர்களுக்கு கருத்தரங்கு

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய கல்விச் சேவைக் குழு நடத்தும் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு இன்றும் நாளையும் நிலைய மண்டபத்தில் மாலை 4 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை நடைபெறவுள்ளது. ஓய்வுநிலை ஆசிரியர் சி.கருணாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் ப.புளோரன்ஸ் வளவாளராக பங்கேற்கவுள்ளார். (ச)


## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS
### Procurement of Electrical Goods

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, Works as specified following Tables.
   01) Air conditioner
   Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements
   01) Bidders shall have valid business registration
   02) and business registration for supply of respective Works, Supplies and Service
   03) Regional preference and CIDA grade preference will be apply as stipulated in Public Finance Circular No 4/2016(11)

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Condact No (021 2222278/4557 ext 20), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hour

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a **non-refundable fee as** specified in the table by cash on working days from **04.10.2023 to 17.10.2023** during 09.00 Hours to 15.00 Hours.

E. Bids must be delivered on or before 10.00 AM of 18.10.2023 to the address given below in the tender box available at the Room of **Additional Regional Director of Finance (TPM)**. Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118days from the bid opening.

G. Pre bid meeting Will be on **10.10.2023** at 10.00 am At RDHS Office Jaffna

I. Procumbent committee will be the **right** to make final decision in regard the accept or reject Bids

Table -1

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security | Bid Security Validity period |
|---|---|---|---|---|---|
| NP/RDHS/LM/2023/04 | Air conditioner 18000BTU | 07 | 2500.00 | 39,000.00 | Till 13.02.2024 |

**Chairman -Regional Procurement committee**
**RDHS Office**
**Jaffna.**

## MINISTRY OF URBAN DEVELOPMENT & HOUSING
## DEPARTMENT OF BUILDINGS
## INVITATION FOR BIDS

**Balance Work of Construction of Medical Officer's Rest Room at Ayurvedic Hospital Kaithady-Stage I** [contract no:BD-286/Z2/21/RCT07/2023]

1. **The Chairman, Regional Procurement Committee (Zone 2),** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for "Balance Work of Construction of Medical Officer's Rest Room at Ayurvedic Hospital, Kaithady-Stage I" as described below and estimated to cost **Rs.6.5 million**. The construction period is **126 Days**.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB). *Since the Estimated Value of Work to be performed under this procurement is below Rs. 50 Mn, regional preference and **CIDA** grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016(iv) & 03/2020.*
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade **C8, C7 or C6** with the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
   *"The bidders shall also register themselves with Registrar of Public Contracts, Sri Lanka, in term of the Public Contracts Act No. 03 of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid. The procurement shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate".*
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer (Zone 2), Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** and inspect the Bidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs.
   Contact numbers are: Phone: 021-2222781, Facsimile: 021-2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chief Engineer (Zone 2), Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna from **04.10.2023** until **24.10.2023** from 9:00hrs to 15:00 hrs upon payment of a non refundable fee of Rupees Two Thousand Five Hundred (**Rs.2,500/-**).
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee (Zone 2), Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** to reach on or before **10:00** hrs on **25.10.2023** Bids will be opened soon after closing at the same address in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 77 Days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in **Section 09** of the bidding document
   - in favour of **Director General of Buildings**
   - for an amount of **Rs.97,000.00**
   - valid up to 05.01.2024.
   - issued by one of the agencies indicated in the **ITB Clause 16.0** of the Bidding Data

Eng.G.R.S.B.Gamlath
Director Construction (Region 2),
Department of Buildings,
2nd Floor,"Sethsiripaya",
Battaramulla.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ முதல்வர் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 4

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மாணவ முதல்வர் நாள் நிகழ்வு இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் மேற்படி கல்லூரியின் பிரதான மண்டபத்தில் சிரேஷ்ட மாணவத் தலைவர் ரி. இளங்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் கல்லூரியின் பிரான்ஸ் பழைய மாணவர் சங்கக் கிளையின் பொருளாளர் பி.ராஜகரன், கல்லூரியின் பழைய மாணவர் எஸ். ஜெயராஜ், அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் ஆசிரியர் த.ஸ்ரீபிரகாஸ் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-ம-66)

### நீதித்துறைக்கு எதிரான அடக்குமுறை

# மன். இளைஞர்கள் இன்று போராட்டம்!

மன்னார், ஒக். 4

நீதித்துறை மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக மன்னார் இளைஞர்கள் தன்னெழுச்சியுடன் ஒன்றிணைந்து போராட்டமொன்றை இன்று நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

மன்னார் பிரதான சுற்றுவட்டப் பகுதியில் இன்று முற்பகல் 10 மணியளவில் இந்தப்போராட்டம்முன்னெடுக்கப்படவுள்ளது. பல்வேறு சிவில் சமூக அமைப்பினரும் இந்தப் போராட்டத்துக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். பொதுமக்கள் பலரும் போராட்டத்துக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். (அ-ம-213)

## நீதிபதிக்கு...

**முல்லை. நீதிமன்றம்**

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்துக்கு முன்பாக வடக்கு- கிழக்கு சட்டத்தரணிகள் நேற்று பெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தமது வாயைக் கறுப்புத் துணியால் கட்டியபடி முற்பகல் 11 மணியில் இருந்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கௌரவ நீதிபதிகளின் கடமையில் தலையிடாதே!, சுயாதீனமான நீதித்துறையின் செயற்பாட்டை உறுதி செய்யுங்கள், நீதிபதிக்கே அச்சுறுத்தல் என்றால் நீதியின் நிலை என்ன?, அரசியல்வாதிகளே நீதிபதிகளைச் சுதந்திரமாகச் செயற்படவிடுங்கள் என்ற கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**யாழ்ப்பாணம்**

நீதிபதி சரவணராஜாவுக்கு நீதிகோரி யாழ்ப்பாணம் மாவட்டச் சட்டத்தரணிகளால் அறிவிக்கப்பட்டிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம்திட்டமிட்டபடி நேற்று முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி உள்ளிட்ட நீதிமன்றங்களில் வழக்கு விசாரணை நடவடிக்கைகள் சட்டத்தரணிகளின் போராட்டத்தையடுத்து முற்றாக முடங்கின. வழக்குகள் அனைத்தும் தவணையிடப்பட்டன. யாழ்ப்பாண சட்டத்தரணிகளின் போராட்டம் இன்றும் இரண்டாம் நாளாகத் தொடரவுள்ளது.

**மன்னார்**

சிவில் சமூகப் பிரதிநிதிகளும், மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து மன்னாரில் நேற்றுப் போராட்டத்தை மேற்கொண்டனர். மன்னார் நகர பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய சிவில் சமூக மற்றும் அரசியல் பிரதிநிதிகள், இலங்கையில் தொடர்ச்சியாகச் சட்டத்துறை மற்றும் நீதித்துறை எதிர்கொண்டுவரும் அழுத்தங்கள் மற்றும் சவால்கள் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்று வலியுறுத்தித் தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அத்துடன் அரசாங்கம் ஒவ்வொரு பிரச்சினைக்கும் அமைக்கும் விசாரணைக்குழுக்களில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை எனவும் சர்வதேச விசாரணை ஒன்றே எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு எனவும் அவர்கள் வலியுறுத்தினர். நீதிபதி சரவணராஜாவுக்கு நீதிகோரிய போராட்டத்தில் மன்னார் மாவட்டச் சட்டத்தரணிகளும் இணைந்தனர். அவர்கள் நீதிமன்றத்துக்குச் செல்லாததால் வழக்கு நடவடிக்கைகள் நேற்று இடம்பெறவில்லை.

(அ-ம-66-27-100-26-60-113-26)

## மாணவியைக்...

பாடசாலைக்கு ஒழுங்கற்ற வரவு தொடர்பில் மாணவியொருவரைக் கண்டித்த ஆசிரியர், மாணவியின் உறவினர்களால் சரமாரியாகத் தாக்கப்பட்டுள்ளார். ஆசிரியரைத் தாக்கிய குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

மாணவியொருவர் பாடசாலைக்கு ஒழுங்கீனமான வரவைக் கொண்டிருந்துள்ளார். இதற்காக அவர் பிறிதொரு பாடசாலை நிர்வாகத்துடனும் முரண்பட்டு இடமாற்றலாகி புதிதாக வேறொரு பாடசாலையில் இணைந்துள்ளார். மாணவியின் ஒழுங்கீனமான வரவுக்காக அந்த ஆசிரியர் மாணவியைக் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கண்டித்துள்ளார். இதையடுத்தே மாணவியின்தந்தையும்சிலரும்இணைந்து பாடசாலைக்கு முன்பாக வைத்து அந்த ஆசிரியர் மீது தாக்குதலை நடத்தியுள்ளனர். ஆசிரியர் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் மாணவியின் தந்தை உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆசிரியரைத் தாக்கிய குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்ட சில மணிநேரத்தின் பின்னர், மாணவி மீது ஆசிரியர் முறைகேடான நடத்தைகளை வெளிப்படுத்தினார் என்று மாணவியின் தரப்பிலிருந்து பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## யாழில்...

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதிகோரியும், அவருக்குக் கொடுக்கப்பட்ட நெருக்கடிகளைக் கண்டித்தும் யாழ்ப்பாணத்தில் இன்று மனிதச் சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கு அனைத்துத் தரப்பினரும் தமது ஆதரவை வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளும், பொது அமைப்புகளும் ஓரணியில் நின்று அழைப்பு விடுத்துள்ளன.

இந்த மனிதச்சங்கிலிப் போராட்டம் இன்று காலை9மணியளவில்மருதனார்மடத்தில் ஆரம்பமாகியாழ். நகர்ப் பகுதி வரையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

'நீதித்துறை மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இந்த அநீதிக்கு எதிராக மருதனார்மடத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரையில் கைகோர்த்தபடி முன்னெடுக்கப்படும் இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் அனைவரும் தம்மையும் இணைத்துக்கொள்ளவேண்டும்'என்றுதமிழ்த்தேசியக் கட்சிகள் கூட்டாக அழைத்துள்ளன.

இதைவிட யாழ்ப்பாணம் வணிகர் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் என்பனவும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. (அ-ம)

## சர்வதேச...

இலங்கையானது எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எந்தவொரு விடயத்துக்காகவும் சர்வதேச விசாரணைக்கு இடமளிக்காது என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் வெளித்தரப்பின் தலையீடு இல்லை என எவ்.பி.ஐ. அறிக்கை வழங்கியுள்ளது. இந்தியா, சீனா, அவுஸ்திரேலியா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் இரகசியப் பொலிஸாரும் அறிக்கைகளை வழங்கியுள்ளனர். எந்தவொரு விடயத்துக்கும் சர்வதேச விசாரணை நடத்தப்படாது - என்றார். (அ-ம-44)

## நொத்தாரிஸ்...

நெடுந்தீவில் காணி மோசடி தொடர்பான வழக்கொன்றில் நொத்தாரிஸ் ஒருவரின் அலுவலகப் பணியாளர் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவில் காணி மோசடி தொடர்பான விவகாரமொன்று அண்மையில் பூதாகரமாகியது. பிரதேசசபையொன்றின் முன்னாள் தவிசாளர், கல்வித் திணைக்களமொன்றின் அதிகாரி உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இந்த மோசடிக்கு உடந்தையாக இருந்த ஒருவரே தற்போது கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதானவர் பிரபல நொத்தாரிஸ் ஒருவரின் அலுவலகப் பணியாளர் என்றும், போலி ஆவணத்துக்கு போலிக் கையொப்பம் வைத்தமைக்காக அவர் கைதுசெய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்த வழக்குடன் தொடர்புடைய நொத்தாரிஸ் ஏற்கனவே நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## நாட்டுக்கு...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

'முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறியுள்ள சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணையை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அதேபோல பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாகத் தனியான விசாரணையை முன்னெடுத்துவருகின்றது. தனக்கு அச்சுறுத்தல் இருந்திருந்தால் பொறுப்புவாய்ந்த பதவியில் இருந்த நீதிபதி அது குறித்து முறைப்பாடு செய்திருக்கவேண்டும். அவர் அவ்வாறு எந்தவொரு முறைப்பாட்டையும் முன்வைக்கவில்லை. நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கும் தெரியப்படுத்தவில்லை. எனவே, இங்கு பெரும் சூழ்ச்சி இருப்பது தெளிவாகின்றது.

அவர் வெளிநாடு செல்வதற்கு முன்னர் மேற்குல நாடுகளின் இராஜதந்திரிகள் இருவரைச் சந்தித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. நீதிபதிக்கு எதிராக அவரின் மனைவியால் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது. எனவே, அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டுவெளியேறினாரா அல்லது தான் செய்த குற்றங்களில் இருந்து விடுபடுவதற்காக நாட்டைவிட்டு ஓடினாரா? என்பது குறித்தும் ஆராயவேண்டும்.

இங்கு சூழ்ச்சி உள்ளதா? இதன் பின்னணியில் எதிரணி தொடர்புபட்டுள்ளதா? இது நாட்டை அபகீர்த்திக்கு உட்படுத்தும் முயற்சியா? என்ற சந்தேகங்கள் எமக்கு உள்ளன. உண்மைகண்டறியப்படவேண்டும். 1988 - 1989 காலப்பகுதியிலும் நீதிபதி ஒருவர் நாட்டைவிட்டு வெளியேறினார். எனவே, இது முதல் சந்தர்ப்பம் அல்ல. அன்று நீதிபதிகள் காரணத்தை வெளியிட்டனர். இவர் வெளியிடவில்லை' - என்றார். (அ-ம-44)

## நீதிபதியின்...

கணக்கில் போடுவதற்கு முயற்சிக்க வேண்டாம் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறிய பின்னரே, அச்சுறுத்தல், மனஅழுத்தம் தொடர்பில் அவர் எழுதிய கடிதம் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளது. அவ்வாறு அழுத்தம், அச்சுறுத்தல் இருந்திருந்தால் நாட்டைவிட்டு வெளியேறிய பின்னர், கடிதம் அனுப்பி இருக்கவேண்டியதில்லை. அதற்கு முன்னர் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் நீதிபதிக்கு இருக்கின்றது.

நீதிபதி ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுமானால் அந்த அச்சுறுத்தலை விடுப்பது அரசாங்கமா? நாடாளுமன்ற உறுப்பினரா? அல்லது தனி நபரா? என்பது விடயமல்ல. ஏனெனில் அச்சுறுத்தல் விடுத்த நபருக்கு பிடியாணை பிறப்பித்து தேவையான நடவடிக்கையை எடுக்கக்கூடிய அதிகாரம் நீதிவானுக்கு அரசமைப்பின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே அவர் பிடியாணை பிறப்பித்திருக்க முடியும், வழக்கு விசாரணை செய்து தண்டனை வழங்கியிருக்க முடியும், மேன்முறையீடு, உயர்நீதிமன்றத்துக்கு முன்னிலைப்படுத்தியிருக்கமுடியும். ஆனால், அந்த அதிகாரத்தை அவர் பயன்படுத்தவில்லை. எனவே, அதற்கான பொறுப்பை அவர்தான் ஏற்கவேண்டும்.

இது தொடர்பான பொறுப்பை அரசின் கணக்கில்போட முற்படவேண்டாம். ஏனெனில் மாவட்ட நீதிபதிகள் நியமனம், ஒழுக்க நடவடிக்கை உட்பட அனைத்து விடயங்களையும் நீதிச்சேவை ஆணைக்குழுதான் முன்னெடுக்கின்றது. அரசமைப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழு அது. ஆதலால், நீதிபதி தொடர்பில் விசாரணை நடத்தும் அதிகாரம் அரசுக்கோ, ஜனாதிபதிக்கோ கிடையாது. நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு மட்டும்தான் அந்த அதிகாரமுள்ளது. பிரதம நீதியரசர் தலைமையிலான அந்த குழுவுக்கு எந்தவிதத்திலும் அரசால் கட்டளைகளைப் பிறப்பிக்க முடியாது - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதச் சங்கிலிப் போராட்டம்: அனைவரின் ஆதரவும் தேவை

## யாழ். வணிகர் கழகம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

முல்லைத்தீவு நீதிபதி பதவி விலகிய விடயம் இந்த நாட்டில் அதியுச்ச இனவாதத்தின் வெளிப்பாடேயாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ள யாழ். வணிகர் கழகம் யாழில் இன்று நடைபெறும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் அனைவரும் பங்கெடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் யாழ்.வணிகர் கழகம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- இந்த நாடு சுதந்திரம் அடைந்த பின்பு தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டு அவர்களுடைய தமிழ்ப் பிரதேச நிலங்கள் பறிக்கப்பட்டுக்கொண்டு வருகிறது. இதனைத் தடுக்க முற்படுவோருக்கும் அல்லது இதற்கு எதிராகப் போராடுபவர்களுக்கும் எதிராக பல அழுத்தங்களும், அச்சுறுத்தல்களும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையிலே நீதி, சட்டம் ஒழுங்கினை நிலைநாட்ட முற்பட்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கும் அதே அழுத்தமும், அச்சுறுத்தலுமான நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்மக்களைப் பொறுத்தமட்டில் இது எல்லாவற்றுக்கும் ஒரே தீர்வாகப் பொலிஸ், காணி அதிகாரத்துக்கு அப்பால் நீதித்துறையும், சட்டமா அதிபர் திணைக்களமும் உட்படப் பூரண சுயாட்சி அதிகாரமுள்ள ஒரு தீர்வே எமக்குத் தேவை என்பதைக் கடந்தகாலச் செயற்பாடுகள் எமக்குப் புலப்படுத்துகின்றன. அத்துடன் அந்தத் தீர்வை நோக்கி நகர்வதற்கு ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும், அரசியல் கட்சித் தலைமைகளும் ஒன்றாக இணைந்து புத்திசாதுரியமாகச் செயற்படுவதே சிறந்த வழியாகும். நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு எதிராக நாளை (இன்று) முன்னெடுக்கப்படும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் கட்சி பேதமின்றி, பிரிவினைகள் இன்றி பங்கெடுக்க வேண்டும் - என்றுள்ளது.

(அ-ம-66)



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு கோப்பாய்ப் பிரதேச அஞ்சல் அலுவலகத்தால் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அஞ்சல் அலுவலக வீதியில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

(ச-17)

வேலைவாய்ப்பு
யாழ்நகரில் இயங்கும் தனியார் நிறுவமொன்றுக்கு Marketing Manager /Sales Executive தேவை.
077 114 8894

காணி விற்பனைக்கு
புலோப்பளை பளையில் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0044 746 646 4163

GD Design Tailoring
- ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான அனைத்து விதமான நவீன ஆடைகளும் உடனடியாக வடிவமைத்துத் தரப்படும்
- வெளிநாட்டில் இருக்கும் ஆண், பெண், சிறுவர்களுக்குமான ஆடைகளை அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றது போல் வடிவமைத்து பொதியில் அனுப்பும் வசதியும் உண்டு.
238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 075 7595

# வெள்ளைக்கொடியுடன் வந்த எவரும் கொல்லப்படவில்லை

## கோத்தாவின் சதிவலையென பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 4

இறுதிப் போரின்போது வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்த புலி உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என வெளியான தகவலின் பின்னணியில் எனக்கு எதிரான சூழ்ச்சியே இருந்தது. அந்தத் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், இறுதிப்போரை வழிநடத்திய இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெள்ளைக்கொடி விவகாரம் பிரெட்ரிகா ஜேன்ஸால் தயாரிக்கப்பட்ட கதையாகும். அவருக்கு தூதுவர் பதவி வழங்கப்படும் என கோத்தாபய ராஜபக்ச உறுதியளித்திருந்தார் என அவரே கூறியிருந்தார். அவ்வாறு வழங்கப்படாததால்தான் அவர் கோபமடைந்து சென்றார். ஒப்பந்தத்தின் பிரகாரமே அவர் அந்தச் செய்தியைப் பிரசுரித்திருந்தார்.

நான் அப்போது ஜனாதிபதி வேட்பாளர், என்னைச் சந்திப்பதற்கு அவர் அலுவலகம் வந்திருந்தார். இப்படியொரு (வெள்ளைக்கொடி) சம்பவம் நடந்ததா? எனக் கேட்டார். இதற்குப் பதிலளித்த நான், 'இது தொடர்பில் நீங்கள் கேட்பதற்கு முன்னர் இரு ஊடகவியலாளர்கள் என்னிடம் இது பற்றிக் கேட்டனர் 'எனக் கூறினேன். இவ்வளவுதான் நான் கூறினேன். ஆனால் அந்தக் கதையை அவர் அப்படியே மாற்றி எழுதிவிட்டார். ராஜபக்சக்களின் ஒப்பந்தத்தையே பிரெட்ரிகா வெளியிட்டிருந்தார். வெள்ளைக்கொடியுடன்வந்தவர்கள்சுட்டுக்கொல்லப்பட்டனர்எனக் கூறப்படுவது பொய்யான தகவலாகும்' - என்றார். (அ-ம-44)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக். 4

சுழிபுரம் ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி திருக்கோ யில் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை 9.13 மணி தொடக்கம் 10.25 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

அதனையொட்டி கர்மாரம்பம் எதிர்வரும் நவம்பர் முதலாம்திகதி காலை 6.05 மணிக்கு இடம்பெறும்.

மறுநாள் 2ஆம் திகதி எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு காலை 8 மணி தொடக்கம் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

(ச)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 05 . 12 . 1955 |  | 01 . 10 . 2023 |

## திரு.கணபதிப்பிள்ளை மகேந்திரராஜா

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் கட்டுடை மற்றும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கணபதிப்பிள்ளை மகேந்திரராஜா அவர்கள் கடந்த (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை -இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்ற திருநாவுக்கரசு - சர்வலோசனி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சாந்தியின் அன்புக் கணவரும். பிரியா, ஷாளினி, மயூரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரசன்னா (இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை - கைதடி), டர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சாங்கவி, சஷ்விதன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நகுலேஸ்வரன், திரவியராணி (கொழும்பு), காலஞ்சென்ற நிர்மலானந்தன், இராசமலர் (தாவடி), சுசிலாதேவி (ஜேர்மனி), குணேந்திராஜா (ஜேர்மனி) மற்றும் ரவீந்திரராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், லலிதாராணி (ஜேர்மனி), மாலினி (உரும்பிராய்), திரவியநாதன் (ஜேர்மனி), மனோகரி (கனடா), சிறிகாந்தன் (கனடா), ரவிச்சந்திரன் (ஜேர்மனி), சசிகுமார் (கனடா), சுபாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தம்பசிட்டி வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:077 404 8725

(CS 26442) A-1



திருகோணமலை நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்றுக்காலை, சட்டத்தரணிகள் ஒன்றுகூடி முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் மற்றும் அவரது நீதித்துறை பணியை ஆற்ற விடாது ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களுக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். திருகோணமலை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-50)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org